
ஸ்ரீகுருப்யோ நம:

ஸ்ரீ பகவத் கீதா போதம்

பகவத் கீதை ஸ்லோகத்தின் கருத்தை செய்யுளாக
ஸ்ரீ ஆண்டவன் பிச்சி அவர்களால் தொகுக்கப்பட்டது.



பிரசுரகர்த்தர்

பி. டி. பாணி கம்பெனி

17, வெங்கடாசல செட்டி தெரு,
திருவல்லிக்கேணி : : மதராஸ்-5.

கா 1958 [ரூ. 1.

ஸ்ரீ பகவத் கீதா போதம்

ஸ்ரீ குருப்யோ நம:

(ஆப்டோன் படங்களுடன் கூடியது)

பகவத் கீதை ஸ்லோகத்தின் கருத்தை

ஸ்ரீ ஆண்டவன் பிச்சை அவர்களால்

செய்யுளாக தொகுக்கப்பட்டது

பிரசுரகர்த்தர்,

பி. டி. பாணி

17. வெங்கடாசல செட்டி தெரு
திருவல்லிக்கேணி மதருஸ்-5.

காபிரைட்] 1958 [விலை ரு 1.

அட்டவணை

1.	அர்ஜுன விஷாத யோகம்	3
2.	ஸாங்க்ய யோகம்	7
3.	கர்ம யோகம்	12
4.	ஞான-கர்ம-சன்யாச யோகம்	18
5.	சன்யாச யோகம்	21
6.	த்யான யோகம்	25
7.	ஞான விஞ்ஞான யோகம்	31
8.	அக்ஷ ப்ரஹ்ம யோகம்	34
9.	ராஜவித்யா-ராஜ குஹ்ய யோகம்	39
10.	வீபூதி யோகம்	44
11.	விஸ்வரூப தர்சன யோகம்	51
12.	பக்தி யோகம்	61
13.	க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞவிபாக யோகம்	65
14.	குணத்ரயவிபாக யோகம்	69
15.	புருஷோத்தம யோகம்	72
16.	தைவாஸுர ஸம்பத் வியாக யோகம்	75
17.	ச்ரத்தாத்ரய விபாகயோகம்	79
18.	மோக்ஷசன்யாச யோகம்	84

உ

ஓம் ஸ்ரீசங்கர ஸத்குரு சரணார விந்தேப்யோ நம:

ஸ்ரீ சங்கர சத்குரு பாதுகாஷ்டகம்

(1)

அகல்மஷ ஹ்ருதயாம்போஜவாஸ ப்ருங்கிதாப்யாம்
அஹங்காராந்தக நாச அத்புத சரணாம்புஜாப்யாம்
அத்வைத மார்க்க ப்ரதிஷ்டித ஆசார்யாபிஷேகிதாப்யாம்
நமோஸ்துதே ஸ்ரீ சங்கர சத்குரு பாதுகாப்யாம்

(2)

(மம) ஹ்ருதயார விந்த பீடஸ்தாபிதாப்யாம்
ஶ்ருதி ஶாஸ்த்ர ஸார ஸூக்ஷ்மமந்த்ர போதிதாப்யாம்
ஹம்ஸோஹம் ஸோஹம் பாவ ஆத்மானந்த ஸுகப்ரதாப்யாம்
நமோஸ்துதே ஸ்ரீ சங்கர சத்குருபாதுகாப்யாம்

(3)

ஸம்ஸார கோர பவஸாகர தாரணாப்யாம்
ஸங்கல்ப சித்த நிவ்ருத்தி காரணாப்யாம்
ஸம்பூர்ண சாந்தி சதானுக்ரக சாதகாப்யாம்
நமோஸ்துதே ஸ்ரீ சங்கர சத்குரு பாதுகாப்யாம்

(4)

பாபாந்தகார பரிக்ரஹ பாஸ்கராப்யாம்
பரிபூர்ணானுக்ரஹ பலப்ரதாப்யாம்
சாபானுக்ரஹ சர்வசக்திதாயகாப்யாம்
நமோஸ்துதே ஸ்ரீ சங்கர சத்குரு பாதுகாப்யாம்

(5)

அனேக ஜன்மக்ருத பாப ஸம்ஹராப்யாம்
அவ்யாஜ கருணம்ருத வர்ஷிதாப்யாம்
அகண்ட ஆத்மானுபூதி அனுக்ரக பலப்ரதாப்யாம்
நமோஸ்துதே ஸ்ரீ சங்கர சத்குரு பாதுகாப்யாம்

(6)

ஓங்கார சப்த கிங்கிணீநாத போதிதாப்யாம்
உபநிஷத் மஹாவாக்யானுஸந்தான காரணப்யாம்
ஸ்ரீசக்ர யந்த்ர ஸ்தாபனுசார்ய ஸ்ரீ பாதுகாப்யாம்
நமோஸ்துதே ஸ்ரீ சங்கர சத்குருபாதுகாப்யாம்

(7)

நித்யானந்த போத பலப்ரதாப்யாம்
நிஷ்காமகர்ம நித்யானுஷ்டான தபப்ரதாப்யாம்
நிர்மோஹ நிச்சல நிர்விகல்ப சுகப்ரதாப்யாம்
நமோஸ்துதே ஸ்ரீ சங்கர சத்குரு பாதுகாப்யாம்

(8)

(பக்த) சிரோர்ச்ருங்கார சிந்தாமணி பூஷணப்யாம்
சிதாகாச மத்ய நிவாஸ பூர்ண சந்த்ரிகாப்யாம்
சிவோஹம் சத்சிதானந்தபோத தேசிகாப்யாம்
நமோஸ்துதே ஸ்ரீ சங்கர சத்குரு பாதுகாப்யாம்

ஸ்ரீ:

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய
ஸ்ரீமத் சங்கரபகவத்பாத ப்ரதிஷ்டித
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிப ஜகத்குரு
ஸ்ரீமத் சந்த்ர சேகரேந்த்ரஸரஸ்வதி ஸ்ரீபாதை:
க்ரியதே நாரயணஸ்ம்ருதி:

தெளிந்தநடை, எளியபாஷை இவைகளுடன் கூடிய செய்யுளாக அமைந்திருக்கும் பகவத் கீதா போதமென்னும் இந்நூல் தமிழறிந்தவர்களுக்கு கீதையின் கருத்தை ஓரளவு விளக்குவதற்கு உபகாரமாயிருக்குமென்று நம்புகிறோம்.

நாராயணஸ்ம்ருதி:

விஜயயாத்ராஸ்தானம்
மயிலாப்பூர்—சென்னபட்டினம்
விளம்பி ஆச்வினசுத்தப்ரதமை

முன்னுரை

நம் நாட்டின் புராதன இலக்கியங்களில் இரண்டு கண்கள் போன்று திகழ்வன இதிஹாஸ ரத்னங்களாகிய இராமாயணம், மஹாபாரதம் இரண்டுமேயாம். "பாரதம் பஞ்சமோ வேதஃ" என்று கூறப்படுவது உலக பிரஸித்த மானது. வேதங்களுக்கு உபநிஷதங்கள் போன்று மஹா பாரதமாகிய ஐந்தாம் வேதத்திற்கு உபநிஷதங்களாக விளங்குவது ஸ்ரீ பகவத்கீதையாம்.

ஸ்ரீமத் பகவத்கீதை என்பது இறைவனின் இணை யற்ற எளிமையை உலகுக்கு எடுத்துக் காட்டுவதாகும். குழந்தைக்கு அடித்துப் பாலூட்டும் நல்ல தாய் போன்று உலக மாயையில் சுழன்று விவேகமிழந்து கிடக்கும் சேதனனுக்கு நல்லறிவூட்டி அவனைக் கடைத்தேறச் செய்யும் எம்பெருமானின் கருணை தான் என்னே!

தகாத வார்த்தைகளைக் கூறியும், ஒவ்வாத வினுக் களைக் கேட்டும், வெகுளாது, ஐயம் நீக்கி அருளுரை உரைத்த வள்ளலின் வாத்ஸல்யத்தை கீதையில் பாக்கக் காணலாம்.

ஆசானின் அருளும், மாணவன் தகுதியும், கல்வி யின் பெருமையும், உலகின் நிலையாமையும், பேரின்பத் தின் பெருமையும், மாயையின் மருட்சியும், சுருங்கக்கூறி விளங்க வைக்கும் மாண்பு மறக்க இயலாதது.

இராமனுகத் தோன்றி ஒழுக்க நெறி தவருது மாந்தரின் மாண்பினை-கடமையைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகிய இராமவதாரமாம் இலக்கியத்துக்கு இலக்கணம் இயற்றத் தகுதிவாய்ந்தவர் வேறு எவரு

மிரார் என, தானே கண்ணனுய்த் தோன்றி, கீதையெனும் இலக்கண முரைத்தார் போலும்!

சங்கரரும், இராமானுஜரும், மத்வாசாரியரும் விரிவுரை யருளிய இதன் பெருமை கூற்றிலடங்காதது. இதனுண்மைப் பொருளை யறிவது பண்டிதர்கட்கும் இயலாதெனில் மற்றவர்பற்றிக் கூற வேண்டுவதில்லை; ஆதலின் அறிந்தவர் அறியாதவர் அனைவரும் கீதைப் பொருளை உணர்ந்து நற்பேறு பெறவேண்டுமென "பகவத் கீதா போதம்" என்று கீதைப் பாக்களை எளிய பாவடிவில் ஸ்ரீ ஆண்டவன்பிச்சை அவர்கள் இறைவன் இன்னருளால் இயற்றியுள்ளார்கள். அதனை உள்ளவை உள்ளவாறு வெளியிட்டுள்ளோம். இதிலுள்ள நன்மை கொண்டு, தீயவை விலக்கி மேன் மேலும் இத்தகைய பணியில் ஈடுபட எங்களுக்கு ஆர்வ மூட்டுமாறு வாசகர்களைத் தாள்பணிந்து வேண்டி நிற்கின்றோம்.

பிரசுரகர்த்தர்

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ-க்ருஷ்ணுய பரப்ரஹ்மணே நம:

கீதாபோதமென்னும் இச்சிறிய நூலைப்படிக்கும் பக்த மணிகளுக்கு வணக்கமுடன் தெரிவித்துக் கொள்ளும் சிறிய விஜ்ஞாபனம். கீதாபோதமென்னும் பரம புனித மான நாமத்தைத்தாங்கி வெளிவரும் இச்சிறிய பாடற் தொகுதிகள் ஸ்ரீமத் பகவத்கீதையின் நேரான மொழிபெ யற்பல்லவாயினும், ஒருவாறு அவைகள் ஸ்ரீபகவத்கீதை யின் சாரமேயாகும் என்பதை கீதை பாராயணம் செய்யும் பக்தர்கள் அறிந்துகொள்ள முடியும். தமிழ் தவிர மற்ற எந்த பாஷையும் படிக்கவோ எழுதவோ தெரியாத - (அதி லும் தமிழும் நன்கு படிக்கவும் எழுதவும் அறியாத நிலே மையிலுள்ள ஒரு பிறவிக்கடல் நீரைக் கறண்டியால் அள ந்ததரய்ச் சொன்னுல் நம்ப முடியுமா) அவ்வாறே ஸமஸ் க்ருத எழுத்தும் அந்தப் பாஷையின் பதம் அர்த்தம் ஒரு வரிகூடத்தெரியாது. ஸ்ரீ பகவத் கீதையை மொழிபெயர்க்க முடியுமோ ? பெரிய மஹான்கள் (ஸ்ரீ சங்கரர் - ஸ்ரீ ராமா னுஜர் - ஸ்ரீ மத்வர்) பாஷ்யம் எழுதி போற்றியதும் ஆதி நாள் முதல் ஒவ்வொரு பக்தர்களும் மஹனீயர்களான சாதுக்களும் கர்மம் பக்தி ஞானமென்ற மூவகை யோகத் தையும் பயில்வோருக்கும் வழிகாட்டியாய் உலகெலாம் அறிந்து போற்றும் உயர்நலம் பெற்றதாய் சாக்ஷாத் ஸ்ரீ பரமாத்மாவே உலகிற்கு வழிகாட்டியாய் குருக்ஷேத்ர மென்னும் புண்யபூமியில் பந்துக்களை கொல்லமாட்டே னென்று சோகங்கொண்ட அர்ஜுனனை நிமித்தமாக்கி கடமையைச்செய்ய பின்வாங்கும் ஒவ்வொரு ஜீவர்க்கும் அதன் நிலேக்கேற்ற கடமையைச் செய்வதே தவமென்று பயங்கரமான யுத்தகளத்தின் நடுவில் அமைதியுடன் அர்

ஜுனனுக்கு உபதேசித்தார். ஸ்ரீபகவத் கீதாம்ருதத்தை யாவரும் அறிந்தது. அப்படிப்பட்ட மஹத்தான கீர்த்தி வாய்ந்ததும் எல்லா மதங்களுக்கும் எல்லா இனங்களுக்கும் எக்காலத்திலும் எப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்க்கும் வழிகாட்டி. வாழ்விக்கும் மிகமிக உயர்ந்த கருத்தமைந்த வேத உபநிஷத் சாரமாகிய பகவத்கீதைக்கு அறிவாற்றல் ஏதுமற்ற ஒரு பேதை உரை எழுதுவது என்பது பரிகசிக்கத் தக்க பைத்தியக்காரச் செயலாகும். கற்றோரும் அறிவாளரும் கவனித்துச் செய்யவும் அஞ்சும் ஓர் பெரிய காரியத்தை,சிறு குழந்தைக்குரிய விளையாட்டுப் புத்தியால் பிதற்றிய கொச்சை மொழியில் கூசாமல் எழுதியதும் அதை வெளியிட சம்மதித்ததும் பகவத்க்ருபையால் நேர்ந்த அருள் விளையாட்டாகும் என்னும் பேருண்மையை அருள் நேயச் செல்வர்களுக்கும் ஆண்டவன் அடியார்களுக்கும் கல்வியில் கரைகண்ட பெரியோர்களுக்கும் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி ஓர் சிறிது விளக்கம். இதை எழுதக் காரணமாகிய அருள் விளையாட்டைக் கூறப், பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். ஏறக்குறைய சென்ற பன்னிரண்டாண்டுகளுக்கு மேலாய் முழு பைத்யநிலைமையிலுள்ளதாய் உலக இயற்கைக்கு நேர்மாறாய் இன்பம் துன்பம் மானவமானம் குளிர் வெப்பமெல்லாம் அறியாத உன்மத்தமான ஒரு நிலையில் ஆண்டவன் என்ற ஒரு குறிப்பன்றி மற்றெல்லாம் மறந்து உலகின்முன் பெரும் பைத்யமாய் பிச்சி என்று பேர்தாங்கி தன்நிலை மறந்திருந்த இந்த ஜென்மம் ஆண்டவன் திருவருளால்1953ஆம் வருஷம் எவ்வித முன்னேற்பாடுகள், மற்ற பண உதவி எவையுமின்றி பத்ரியாத்திரை மேற்கொண்டு ஆங்காங்கு ஆனந்தமாய் தரிசித்துத்திரும்பியபோது கங்கைக்கரையில் அமைந்துள்ள பகவான் சிவானந்தர் ஆச்ரமத்தைக்கண்டு அதைவிட்டுவர மனமின்றி அவ்விடமே ஆறு மாதங்கள் தங்கி விட்டது. அங்கு பல அருட்செயல்கள் நிகழ்ந்தன.

ஸ்ரீசத்குருநாதர் பகவான் ஸ்ரீசிவானந்த குருமஹாராஜ் இதன்பால் காட்டிய கருணையும் கொடுத்த அருளும் வாக்கினுற் கூறமுடியாதவைகள். தாயினும் இனிய தயாளுவாகிய அப்பெருமான் இப்பக்தி வெறியடங்கி பரமசாந்தி நிலையுண்டாக ஸ்ரீபகவத்கீதை என்னும் பரம ஔஷதத்தை அவ்வப்போது பக்குவமாய்ப்புகட்டியும் கீதாம்ருதம் என்னும் உபதேசங்களால் இதன் உள்ளத்தை சீர்திருத்தி அமைதி உண்டாக்கி அறிந்தும் அறியாத ஆத்ம தரிசனத்தைக் காட்டி அகம் தெளிய வைத்தார். சம்சார பந்தங்களை மனத்தால் நீக்கச்செய்து ஆத்ம சன்யாசமளித்து இனி எங்கிருந்தாலும் ஒன்றே என்ற பாவனையை உண்டாக்கி திரும்பவும் சம்சார சூழ்நிலையில் வசிக்கும்படி அருள் செய்து எங்கிருந்தாலும் கீதை உனக்கு வழி காட்டுமென்று அனுக்கிரகித்தார்கள். திருவடி தீக்ஷையளித்து தாம் என்றும் இதன் உள்ளத்தில் உரைவதாய் உண்மையை உறுதிபடைத்து சாந்தி என்ற சத்போதத்தை ஊட்டி (குருகீர்த்தனைகள் என்ற புத்தகத்தில் உள்ள சிவானந்தபோதம் தரும் மதுவை சதா அருந்து என்மனமே) என்றபடி சத்போத மதுவருந்தி தன்வசமிழந்து பர(ன்) வசமாகி மெய்மறந்து வாழ அனுக்கிரகித்து அனுப்பி வைத்தார்கள். அதுமுதல் பகவான் ஸ்ரீகுருநாதர் உபதேச மொழிகளைச் சிந்தித்து சிந்தைதெளிந்து செயல்படும்போதெல்லாம் கீதையின் போதமாம் அருள்தாக்கி பாடல்களாய் வரும். அப்படி வந்த பாடல்களை எல்லாம் தொகுத்து 1956 செப்டம்பர் 8 தேதி நடந்த ஸ்ரீசத்குருநாதர் ஜெயந்தியாகிய ப்ளாடினம் ஜூபிலி விழாவின் போது தன் ஆத்ம சமர்ப்பணமாக குருநாதர் திருவடிகளுக்கு அர்ச்சிக்க அன்புமலர்களாய் கீதா போதமென்ற பாடல்கள் (400) பூர்ணமாய் ஸ்ரீபகவத்கீதையின் கருத்தை அனுசரித்தே எளிய நடையால் தொகுத்தவைகள். ஸ்ரீகுருநாதர் பகவான் சிவானந்தருடைய நினைவுமலர்களாய் குருநா

தருக்கு அனுப்பி வணக்கம் தெரிவித்துக்கொண்டது. பிறகு 1957 டிஸம்பரில் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீபரமஹம்ஸபரிவ்ராஜ காசார்யவர்ய ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீபக வான் சங்கராவதார சத்குரு ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ் வதி ஸ்வாமிகள் அவர்கள் சென்னையில் விஜயம் செய்து அச்சமயம் அடையாரில் காந்திநகரில் தங்கியுள்ளபோது பக்தர் ஸ்ரீ பி. டி. பாணி அவர்கள் மூலமாய் தமிழில் பகவத் கீதை எழுதியுள்ளதைக் கேட்டு தாம் அதைப்பார்த்து வெளியிடப்போவதாய் பேரருள் புரிந்து அனுக்ரகித்தார் கள். அப்போது அது பகவத்கீதைக்கு சரியான மொழி பெயர்ப்பல்லவென்றும் அது நிகழ்ந்த காரணத்தையும் சுருக்கமாய் ஸ்ரீ பரமாச்சார்யாளிடம் விஜ்ஞாபித்துக் கொள்ள அதைப்பற்றி உனக்கு கவலை வேண்டாம். நான் வெளியிட ஆசியளித்து விட்டேன் என்று அருளுடன் கூறி அன்புடன் ப்ரஸாதம் அளித்து அனுக்ரகித்தார்கள். ஸ்ரீ பி. டி. பாணி அவர்களையே அதை வெளியிடும்படி ஆஜ்ஞை செய்து அனுக்ரகித்தார்கள். அன்பு மிகுந்த அடியார்த்திருவடிகளை வணங்கி பரமாச்சார்யாள் பாதகம லங்களைப் பன்முறைப் பணிந்து கீதாபோதமென்ற பாடல் கள் வெளிவரக்காரணம் என்ன என்பதை இதன் சிறிய மனதில் தோன்றியவண்ணம் பக்தர்களுக்குக் கூறக் கடமை பட்டுள்ளேன். முள்செடியில் அழகிய ரோஜா மலர் கள் போல் பிழைநிறைந்த வாக்கியங்களில் பகவத்கீதாசார மென்ற ஒரு ரோஜாமலராவது இருக்குமென்ற நம்பிக்கை யாலும் ஸ்ரீ பரமாச்சார்யாள் அருளாசியாலும் கீதாபோதம் வெளிவருகிறது. சேய் பிழை பொருக்கும் தாய்போல் பக்தியுலகம் இப்பேதையின் பெரும்பிழையை மன்னித் தருள வேண்டும்.


ஆண்டவன் பிச்சை.

திருத்தணிகேசர் துணை

'ஸ்ரீ பகவத் கீதா போதம்' எனப் பெரிய அருமை நூலை முழுதும் படித்துப் பார்த்தேன். மூல ஸ்லோகத்தின் கருத்தை ஒட்டித் தமிழ்ப்பா வகையில் மிகத் தெளிவான நடையில் சிவத்யான சிரேஷ்டரான அம்மையார் அவர்கள் பாடியுள்ளது மிகவும் பாராட்டத் தக்கதோர் திருப்பணி ஆகும். உலக விஷயங்கள் பலவற்றுல் கலக்கம் உறும் நமது மனத்துக்குச் சாந்தி தரத்தக்கது இந்நூல் ஆதலின் இந்நூலைத் தமிழ் மக்கள் யாவரும் பெற்றுப் படித்து, உள்ளம் அறிந்து மன அமைதி பெற்று மகிழ்வார்களாக.


'உலகெலாம் வியக்கும் உத்தம நூலாய்
இடருறும் போதெலாம் இடரறும் வழியதைக்
காணெனக் காட்டும் கண்ணுடி யாகும்
பகவத் கீதாப் போதப் பழைய
வடமொழி நூலின் மாண்பார் பொருளை
அருட்கவி அம்மையார் ஆண்டவன் பிச்சை
தென்மொழி யதனில் தெளிவுகொள் நடையில்
பொருத்தம தான விருத்தப் பாவகை
யதனில் அமைத்த அருமை நூலிது
இப்பா ரதனில் யாவரும் மகிழ
நந்தமிழ் அணங்கு நயந்து சூடிடும்
திருஆ பரணமாய்த் திகழுமெந் நாளுமே.

வ. சு. செங்கல்வாரய பிள்ளை



கீதாபோத செய்யுள் ஆசிரியை

ஆண்டவன் பிச்சை



ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ பகவத் கீதா போதம்

ஸ்ரீபகவத்கீதை மூலஸ்லோகத்தின் கருத்தை அனுஸரித்து
தமிழில் விருத்தமாய்த் தொகுத்தது

ஆரம்பம்

ஸ்ரீ பகவான் வேதவ்யாஸ குருஸ்துதி

(மூலஸ்லோகம்) நமோஸ்த்துதே வ்யாஸவிசால
புத்தே

தமிழ் விருத்தம்

பாரதச் சுடர் விளக்கை பக்தியுடன் ஏற்றி வைத்த
சீரருள் வியாஸ முனி சேவடிகள் போற்றி செய்து
ஆரமுதாம் கீதைதனை அனைவர்க்கும் எடுத்தோத
பேரருள் வழங்கிய சங்கர சத்குரு போற்றி.

பகவான் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா ஸ்துதி
(மூலஸ்லோகம்) ப்ரபன்ன பாரிஜாதாய தோத்ர
[வேத்ரைக பாணயே]

தமிழ் விருத்தம்

சரணமடைந்தவர் கேட்டதை அளிக்கும்
மரமாம் கற்பகம் போன்றவன் மாதவன்
கரமலர் ஞான முத்திரை காட்ட
திற முடன் சாட்டை ஏந்திய கண்ணன்

பரத்தைக் காட்டும் பாலாம் கீதையை
கறந்தளித்த கண்ணன் கழலிணை
சிரமது வணங்கி சிந்தை தெளிந்திடச்
செப்பும் ஸ்ரீ குருநாதர் சீர்பாத தூளியே

(மூலஸ்லோகம்) ஸர்வோப நிஷதோ காவோ தோக்தா
கோபால நந்தன: பார்தோ வத்ஸ: ஸுதிர் போக்தா
துக்தம் கீதாம்ருதம் மஹத்

தமிழ் விருத்தம்

வேதப் பசுவிடத்தில் மாதவன் இடையனாய்
சாதுவாம் அர்ஜுனனைக் கன்றாக ஊட்ட வைத்து
போதம் தரும் பாலாம் கீதை எனும் அமுதத்தை
ஓதி உணர்வார் நல்ல உத்தம கதி பெறுவார்.

ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

கீதாரம்பம்

முதல் அத்தியாயம்

அர்ஜுன விஷாதயோகம்

(மூலஸ்லோகம்) திருதராஷ்ட்ரோவாச தர்மக்ஷேத்ரே
[குருக்ஷேத்ரே

தமிழ் விருத்தம்

திருதராஷ்ட்டிரர் கேட்பது

குருடராம் திருதராஷ்ட்ரர் குந்தியின் மைந்தரோடு
பொருதிடச் செல்லும் தன் புதல்வர்கள் செய்தி கேட்க
அருளுடன் வ்யாஸர் தந்த அகக் கண்கள் தன்னூற்கண்டு
இருபுறம் நடக்கும் செய்தி இசைத்திட்டார்
[ஸஞ்சயர் தாம்

(மூலஸ்லோகம்) ஸஞ்சயோவாச: ஸ்லோகம் 2, 3,
த்ருஷ்ட்வாது பாண்டவா நீகம் வ்யூடம் துர்யோதன
[ஸ்ததா

தமிழ் விருத்தம்

ஸஞ்சயர் கூறுவது

அணிவகுத்து நின்றுள்ள ஐவரின் சேனை கண்டு
பணிவுடன் த்ரோணரிடம் பகருவான் துர்யோதனனும்
துணிவுடன் த்ருபத புத்திரன் உம்மை எதிர்த்திட
அணிவகுத்து நின்றுள்ளான் ஆசார்யா பாருமென்றான்

11, 12 ஸ்லோகம்

(மூலஸ்லோகம்) அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் [பீஷ்மாபிரக்ஷிதம்

அயனேஷுச ஸர்வேஷு யதாபாக மவஸ்த்திதா: [2, ஸ்லோகம் சேர்ந்தது

தமிழ் விருத்தம்

நஞ்சேனை பீஷ்மரின் பார்வையில் உள்ளது
பஞ்சவர் சேனைபலம் பீமன் கையுள்ளது
வஞ்சகம் பீஷ்மர் நமக்கேதும் செய்யாமல் நீர்
சஞ்சலம் கொள்ளாது சண்டை துவக்குமென்றான்

14(மூலஸ்லோகம்) தத: ஸ்வேதைர் ஹயைர்யுக்தே

தமிழ் விருத்தம்

புலனைந்தும் தூய்மையாய் புரவிகள் ஐந்தாகி
நிலந்தனைக் காத்திட வந்தவன் தேர்மீதில்
அலர்ந்தெழும் கதிர்போல அர்ஜுனன் தன்னோடு
வலம் புரிச் சங்கெடுத்து ஊதினன் வாஸுதேவன்

ஸ்லோகம் 20

(மூலம்) அத வ்யவஸ்த்திதான் த்ருஷ்ட்வா தார்த்
[ராஷ்ட்ரான் கபித்வஜ:

தமிழ் விருத்தம்

குரங்குக் கொடியோனும் குந்தியின் புத்திரன்
கரந்தனில் காண்டீபம் ஏந்தி எதிர் நின்ற
உரமிகும் துர்யோதனுதியரைக் கண்டதும்
சிரம் வணங்கிக் கூறுவான் ஸ்ரீக்ருஷ்ணன் தன்னிடம்

அர்ஜுன உவாச

(மூலம் ஸ்லோகம்) 21, 22, 23 சேனயோருபயோர்
[மத்யே

கைர்மயா ஸஹயோத்தவ்ய மஸ்மின் ரணஸமுத்யமே
[தார்த் ராஷ்ட்ரஸ்ய துர்புத்தேர்

அர்ஜுனன் கேட்பது

தமிழ் விருத்தம்

சண்டைக்கு வந்துள்ள சத்துருக்கள் சேனையை நான்
கண்டறியும் இடத்தில் தேர் கொண்டு செல்வாய்
[கண்ணு நீ
பண்டையவர் செய்ததற்கு தண்டனையடையும்முன்
அண்டையில் சென்றவரைக் காட்டென்ருன்
[காண்டீபன்

(மூலம் ஸ்லோகம்) 26, 27 தத்ராபச்யத் ஸ்திதான் [பார்த்த:
ச்வசுரான் ஸுஹ்ருதச் சைவ சேனயோருப யோரபி

ஸஞ்சயர் சொல்வது

தமிழ் விருத்தம்

புண்ணிய பூமியாம் குருக்ஷேத்திரம் தன்னில்
எண்ணரும் வீரர்கள் இருபுறமும் சூழ்ந்திருக்க
திண்ணிய தேர்த்தட்டில் சாரதியாய் அமர்ந்துள்ள
கண்ணனின் தாட்பணிந்து காண்டீபன் கேட்கலுற்றான்

இருபுறத்துச் சேனையிலும் இருக்கும் வீரரைக்கண்டு
வருத்தம் மிகுந்தவனாய் வாடும் மனத்துடன்
அரும்பெரியார் ஆசார்யர் அம்மான்மார் ஸோதரர்கள்
சிறுவர்கள் தோழர்கள் சேர்ந்திருக்கக் கண்டயர்ந்தான்

அர்ஜுன உவாச

(மூல ஸ்லோகம்) 45.

[அஹோபத மஹத்பாபம் கர்த்தும் வ்யவஸிதாவயம்]

தமிழ் விருத்தம்

வணங்கும் பெரியோரை வதைத்து நான்பெறும் இன்பம்
சுணங்கன் கடித்திடும் எலும்பின் சுவையன்றோ
குணங்கெட்ட பேயன்யான் கொடுந்தொழில் புரிய [வந்தேன்
இணங்க மறுக்குதென் இதயமென்றே அயர்ந்தான்

அர்ஜுன விஷாத யோகமென்ற முதல் அத்யாயம் முடிவு.

இரண்டாம் அத்தியாயம்

(ஸாங்க்ய யோகம்)

ஸ்ரீ பகவான் உவாச

(மூல ஸ்லோகம்) 2, 3.

2. ததஸ்த்வா கஸ்மலமிதம் 3, க்லைப்யம்

ஸ்ரீ பகவான் கூறுவது

தமிழ் விருத்தம்

க்ஷத்ரியனுக் கொவ்வாத சஞ்சலம் ஏன் உனக்கு
இத்தரணி உள்ளவரை ஏச்சுக்கிடமாகும்
புத்தி உனக்கேனிந்த போதில் உதித்ததென்று
சித்தம் தெளிவடைய ஸ்ரீ க்ருஷ்ணன் கூறலுற்றான்

துன்பத்துக் கஞ்சி தொழில் செய்ய மறுத்திட்டால்
வன்பழி வந்தடையும் வையகத்திலுந்தனுக்கு
என் பக்தனென்று எடுத்துரைத்தேன் தர்மத்தை
அன்பனே அர்ஜுன ஆண்மையுடன் போர் புரிவாய்

அர்ஜுனன் கேட்பது

(மூல ஸ்லோகம்) 7. கார்ப்பண்ய தோஷ

பந்து வென்னும் பாசத்தால் கொந்தளிக்கு தெந்தன்
[உள்ளம்
சிந்தை தெளிவில்லை செயலாற்றும் திறமில்லை
எந்தனுக்கு ஏற்றவழி ஏதோ நீ எடுத்துரைப்பாய்
உந்தனையே சரணடைந்தேன் உபதேசம்
[அருளென்றான்

ஸ்ரீ பகவான் கூறுவது

(மூல ஸ்லோகம்) (27. 33. 34. 35. 36. 37.)

ஜாதஸ்யஹி முதல் ஹதோவா வரை

தமிழ் விருத்தம் (ஸ்) 27. கருத்து

பிறப்பவர் இறப்பரெனும் பேருண்மையறிந்தவர்
மறந்தும் மாயையின் வசமாய் மயங்குவரோ
அறத்தின் நிலையுரைத்தேன் அர்ஜுனா அறிந்து நீ
துறவி போல் பற்றின்றி தொடங்குவாய் கர்மத்தை

(ஸ்லோகம்) 33. 34. 35. 36. 37.

அதர்மத்தால் தர்மம் அழிய இடமளித்தால்
சிதறிடும் குலதர்மம் செய்வதெல்லாம் வீணும்
பதறிடும் உள்ளத்தில் பகுத்தறிவு தோன்றுது
உதறுவாய் உள்ளத்தைக் கலக்கும் அஜ்ஞானத்தை

ஆண்மை இல்லாதவன் அர்ஜுனன் என்றுன்னை
வீண்பழி சொல்லுவார் வீரரெல்லாம் என்றும்
காண்டீப னென்றால் கை கூப்பித் தொழுதவர்கள்
மாண்டில்லா உந்தனை மதிப்பாரோ தனஞ்ஜயா

பற்றின்றி பணி செய்வாய் பலனை எதிர்பாராதே
குற்றமென்றும் குணமென்றும் கூற உனக்கியலாது
உற்றதை ஏற்று உவகையுடன் இருப்போர்க்கு
தெற்றெனவே நீங்கும் தீவினைப் பயனெல்லாம்

(மூல ஸ்லோகம்) 56. 57. 58. 59.

இன்பத்தில் எக்களித்துத் துன்பத்திற் துடியாது
வன்பகை பயம் கோபம் வருத்தமடையாது
என் பக்தனாய் எவன் இருக்கின்றானோ அவனே
தன்னிலை தளராத யோகி யென்றறிவாயே

நன்மை தீமைகளில் நடுநிலைமை வகித்து
என்ன வந்தடைந்தாலும் இதயம் தளராது
பொன்னும் புகழும் இன்னலாம் வறுமைகளும்
தன்னதாய் எண்ணித் தளராதவன் யோகி

ஆமைபோல் ஐந்தையும் அகத்துள் அடக்கியே
தீமை செய்யாணவத்தைத் திரும்பியும் பாராமல்
ஊமைபோல் உள்ளம் ஒய்வடைந்த ஞானிக்கு
சீமையில் எல்லாச் சிறப்பும் வந்தடையும்

ஐந்தின் சுவையடக்கி அகத்தெளி வுற்றவன்
ஐந்துக் கப்பாற்பட்ட ஆத்மாவைக் கண்டறிவான்
ஐந்தும் அடங்கினுல் அவாவெல்லாம் அடங்கும்
ஐந்தும் அவனுக்கு அடிமையாம் அர்ஜுனு

(ஸ்லோகம்) (62. 63. 66. 68. தமிழ் உரை)

உற்றுப் பார்க்கும் பொருள்மேல் பற்றுதல் தோன்றும்
பற்றுதலால் ஆசைபலவாய் மூளத்தெழும்
குற்றமாம் ஆசையே கோபமாய் மாறிடும்
மற்றதுவே மோகமாய் மூண்டறி வழிந்திடுமே

அறிவிழந்தவனுக்கு அமைதி உண்டாகுமோ
விரித்துரைக்கும் வேதப்பொருள்தான் விளங்குமோ
சிறிதேனும் ஆத்ம சிந்தனைக் கிடமுண்டோ
திரிந்திடும் உள்ளத்தில் திடமும் அமைதியுமேது

(ஸ்லோகம்) 69. 70.

தமிழ் விருத்தம்

அக்ஞானிக்கு எதில் விழிப்போ ஞானியதில் உறங்கு
கின்ருன்
முக்யமாய் ஞானிக்கெதில் விழிப்போ அக்ஞானி
தக்கவிடமறியாமல் தான் தூங்கி விழுகின்ருன்
மக்கள் இருவகையாம் மானிலத்தில் அர்ஜுனு

ஆசை நதி எல்லாம் அதி வேகமாய் ஓடி
மாசற்ற மனக்கடலில் வீழ்ந்து மறைகின்றது
ஓசையுடன் சென்ற நதி உருமாறிக் கலந்தாற்போல்
பூசை செய்வார் உள்ளத்தில் புன்மை எல்லாம்
மறைந்திடுமே

(மூல ஸ்லோகம்) 71.

தமிழ் விருத்தம்

இந்த்ரியங்கள் ஐந்தும் இச்சை போல் திரியாமல்
பந்தித்துப் பாசத்தை யறுத்த யோகியை
வந்திக்கும் இருவினையும் வழிகாணும் முக்திக்கு
சிந்தித்திடுவாய் இதனில் சிறந்த தவம் வேறில்லை

*

மூன்றும் அத்யாயம்

(கர்மயோகம்)

(மூல ஸ்லோகம்) 1. 2.

அர்ஜுனன் கேட்பது

தமிழ் விருத்த உரை

கருமத்தைக் காட்டிலும் ஞானம் உயர்ந்ததென்ருல்
பெரும் பாவத்திற்கேன் என்னைத்தூண்டுகிருய் கேசவா
இருவிதங்கூறி என்னிதயத்தைக் குழப்புகிருய்
ஒருவழி நிச்சயமாய் உரைப்பாய் ஜனார்த்தனு

ஸ்ரீ பகவான் கூறுகிருர்

(மூல ஸ்லோகம்) 3. (லோகேஸ்மின்) 4. 5.

கன்மமும் யோகமும் கண்ணிரண்டு பார்வையொன்றே
மன்மயக்கம் நீங்கி மாசற்ற பேர்களுக்கு
ஜென்மசிறை நீங்க சாங்கியம்போல் கர்மமென்று
உன்மனம் தெளிய உரைத்தேன் இரண்டினையும்

செயலின்மையால் ஒருவன் கட்டில்லாதவனல்ல
செயலின்மையா லொருவன் சன்யாசியென்ருகான்
செயலெலாம் என் செயலென்றறிந்திடும் ஞானியை
செயலேதும் பற்ருது செய்வதெல்லாம் என்பணியே

கணமேனும் செயலின்றி கருத்திருப்பதருமையாம்
குணம்மூன்றினுல் இயங்கும் குறிப்பறிந்த யோகியர்கள்
பணிசெய்தும்பயனடையார் பணிசெய்யா திருந்திடினும்
இணங்கவைக்கும் இருவினைக்கும் நானென்ற ஆணவமே

(ஸ்லோகம்) **6. 7. 8.**

புறத்தில் புலனடக்கி அகத்துள் அதை நினைப்போன்
வெறுத்திடும் பொய்யொழுக்கங்கொண்டபெரும்
[மூடனும்
புறத்தில் பணியெல்லாம் பற்றின்றி செய்து மனம்
துறந்தவன் எவனே அவனே சிறந்தவனும்

(மூல ஸ்லோகம்) 8. தமிழ் உறை

தன்னுடல் சேவைக்கும் தன்னுத்ம நன்மைக்கும்
தன்னுடலும் தன்மனமும் இயங்காதியலுமோ
தன்னலமற்று தரணியில் பணிசெய்யும் ஞானிக்கு
தன்னுள் தானே தத்துவம் விளங்கிடுமே

(ஸ்லோகம்) 17. 18. 19. 20. 21.

யஸ்த்வாத்ம. முதல் யத்யதாசரதி வரை.

(ஸ்லோகம்) 17. 18.

ஆத்மாவைக்கண்டு ஆனந்தமுற்றவன்
அதற்கன்னியமாய் ஒன்றையறிந்தின்ப முற்றிடான்
ஆத்மாவை அறிந்த ஆத்மஞானிக்கிங்கு
ஆவதொன் றுமில்லை அவன் செய்வதேதுமில்லை

ஆத்மஞானத்தால் அகம்தெளிந்த யோகிக்கு
அகர்மகர்மத்தால் ஆகவேண்டியதில்லை
ஆத்மானந்தமே அனைத்திலும் மேலாக அறிந்து
அவா அடங்கி அகம் ப்ரம்மமாயிருப்பார்

(ஸ்லோகம்) 19.

பற்றின்றி பணியெல்லாம் பாங்குடன் செய்திடுவாய்
குற்றமொன்றும் சேராது கூடும் பரம பதம்
மற்றிதனையே ஜனகன் முதலானோர் அனுசரித்து
பெற்றனர் பேரின்பம் பின்பற்றுவாய் அவரை

(ஸ்லோகம்) 20.

உலகத்தோடொத்து உன்பணி எல்லாம் செய்து
பலகலை கற்றும் பணிவுடன் உலகத்தில்
ஜல கமல இலை போல ஜகமீதில் வாழ்வதே
ஜனகாதியர் காட்டும் சன்மார்க்கமென் றுணர்வாய்

(ஸ்லோகம்) 21. 22.

அறிவுடையோன் செய்வதையே அனைவரும் செய்திடுவார்
அறிவுடையோனையே அகிலமெல்லாம் நாடிடும்
அறிவிற்சிறந்த அர்ஜுனா எனக்கிங்கு
அறிந்து செய்தடைவதற்கு ஏதுமில்லையாகிலும்

(ஸ்லோகம்) 23, 24. (யதிஹ்யஹம்—உத்ஸீதேயு ரிமேலோகா)

எப்போதும் அயர்வின்றி என் பணிகள் செய்கிறேன்
எப்போதும் மனிதர்கள் என் நெறியே தொடர்வதால்
எப்போது யான்செய்யும் கர்மம் தடைபடுமோ
அப்போது இவ்வுலகம் நிலைகுலைந்தழிழ்ந்திடுமே

அல்லும் பகலும் அயர்வின்றி என் பணிகள்
நில்லாமற் செய்கின்றேன் நியதி வழுவாதிருக்க
எல்லாம் என்னருளால் இயங்குகின்றதன்றியதில்
இல்லை எனக்காசை எனக்கேதும் பற்றில்லை

(ஸலோகம்) 22, 23. 24. 25. 26. (25. 26. தமிழ் உரை)

பற்றுள்ளவன் பாரில் பணிசெய்தற் போலவே
பற்றற்ற ஞானியும் பாரின் நன்மைக்காக
பற்றின்றி பணிசெய்து பலருக்கும் வழிகாட்டி
பற்றின்மையால் வரும் பலனை விளக்கிடுவார்

(ஸ்லோகம்) 27, 28, 29, 30, 33. (தமிழ் உரை)

முக்குணத்தாற் கட்டுண்டு முற்றிலும் தமைமறந்த
பக்குவமில்லார் பணியை பரிகசித்தலாகாது
தொக்கி நிற்கும் முக்குணத்தால் துறவியின் உள்ளமும்
சிக்கிநிற்கும் சிலசமயம் முக்குணத்தின் மோஹத்தால்

பருவத்தால் பழமாகும் காய் போன்ற திவ்வுள்ளம்
சிருகச்சிருகச் சீர்திருத்தம் வேண்டுமே
கருமமெல்லாம் செய்தல் கடமை என்றே உணர்ந்து
ஒருமையுடன் பணிசெய்து உள்ளத்தை எனக்களிப்பாய்

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) **36.** **தமிழ் உரை**

விருப்பமில்லாவிடினும் வேறெதனுல் தூண்டிமனம்
கருமத்தைச் செய்திடக்கட்டாயப் படுத்துவதேன்
திருதுருக்கும் மனம் துன்பமென்றறிந்தும்
இருவினைக்கும் இடையில் இழுக்கப்படுவதேனே

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) **37, 38, 39, 40, 41, 42, 43.**

தமிழ் உரை

(ஸ்லோகம்) 37

கருமத்தில் தூண்டுவது காமக்ரோதங்களாம்
பெருந்தீனி வேண்டும் பேயினும் கொடியதாம்
வரும் ரஜோகுணத்தாலிதை வைரி என்றறிந்தவர்கள்
திரும்பியும் பாரார்கள் திடசித்தமுடையவர்கள்

(ஸ்லோகம்) **38.** **(தமிழ் உறை)**

புகையால் நெருப்பும் அழுக்கால் கண்ணுடியும்
தகைமையால் தாய்வயிற்றில் கர்ப்பம்மறைந்ததுபோல்
திகைத்திடச் செய்து மறைத்திடும் ஞானத்தை
பகை என்றறிவாய் ஞானத்திற்காசையே

(ஸ்லோகம்) 39, 40, 41.

ஆசைக்கிருப்பிடம் ஐந்து புலன் மனம் புத்தி
பாசைப்போல் அறிவை மறைக்கும் இவ்வாசைகளை
ஓசைப்படாமல் உள்ளத்தில் கட்டிவைத்து
ஆசை என்னும் பேயை அடக்கிடுவாய் அர்ஜுனா

(ஸ்லோகம்) 42, 43.

புலனைந்தைக் காட்டிலும் புகழ்ச்சிக்குரியது மனம்
அலையும் மனத்தினும் அறியும் புத்தி மேலாம்
கலங்காத புத்திக்கும் அப்பாற்பட்டது அறிவு
நிலைத்த அறிவே ஆத்மாவென்றறிவாயே

நான்காவது அத்யாயம்

(ஞான கர்ம சன்யாச யோகம்)

(ஸ்லோகம்) 3.

பாரில் மிகச்சிறந்த யோகத்தை யானுரைத்தேன்
வேறில்லை இதற்கீடு வேதமொழி என்றறிவாய்
நேரில் உனக்குரைத்தேன் நேசனென்ற ஆசையால்
மாரில்லா பக்தியும் ஞானமும் பெற்றிடுவாய்

(ஸ்லோகம்) 5, 7.

உனக்கும் எனக்கும் உற்ற ஜென்மங்களெத்தனையோ
எனக்கத்தனையும் தெரியும் ஏதும் நீயறிந்திடாய்
கனமிகும் தருமம் அதருமத்தால் அழியுங்கால்
மனமுவந்தென்னை நான்படைத்துக்கொள்கின்றேன்
காண்]

(ஸ்லோகம்) 8, 9.

சாதுஜனங்கள் துன்புறும் போதெல்லாம்
பூதலத்தில் அவதரித்து புண்ணியரைக் காத்திடுவேன்
தீதுசெய்யும் துஷ்ட்டர்களை சங்கரித்து இவ்வுலகில்
நீதியை நிலைநாட்ட நான் அவதரிப்பேன் அடிக்கடி

(ஸ்லோகம்) 9.

என்பிறப்பின் மர்மத்தை எவன் அறிந்துக்கொள்வானோ
அன்பனவன் இறந்தபின் அடைவதில்லை மறுபிறவி
முன்பிழைத்தவினைகள் முற்றும் அழித்தவரை
என்பதவியில் வைத்து என்றும் வாழ்ந்திடச்செய்வேன்

(ஸ்லோகம்) 13.

நால்வகை ஜாதியும் நான் படைத்தேன் மண்மீது
நால்வகைப் பணிசெய்ய நாட்டியதன்றியதில்
நான் கர்த்தாவாயிடினும் நானதிற் கலப்பதில்லை
நான் ஏதும் பற்றில்லா தவனென்றறிவாயே

(ஸ்லோகம்) 15.

முற்றிலும் இவ்வாறெனையுணர்ந்த முமுக்ஷுக்கள்
பற்றில்லாது தம்பணி எல்லாம் செய்தார்கள்
சற்றும் நீ சஞ்சலம் கொள்ளாமல் பணி எல்லாம்
மற்றெனக்கே அர்ப்பித்து மனந்தெளிவுற்றிடுவாய்

(ஸ்லோகம்) 17, 18.

செயலிற் செயலின்மையும் செயலின்மையிற் செயலும்
மயக்கமில்லா மனத்தோர் மறைவின்றி கண்டிடுவார்
நியமித்த நற்செயலும் நியமிக்காதுற் செயலும்
நிச்சயித்துக்கூற எவர்க்கும் எளிதன்று

(ஸ்லோகம்) 20, 22.

பலன் கருதாப்பணியும் பரிபூர்ண மனநிலையும்
கலங்காத நெஞ்சோடு கர்மம் செய்பவன் யோகி
உலகில் தனக்குற்றது கொண்டுள்ளம் களிப்படைந்து
நலியும் வினைப்பயனை நாடாதவன் ஞானி

(ஸ்லோகம்) 24,

அர்ப்பணம் ப்ரம்மம் அர்ப்பிக்கும் பொருள் ப்ரம்மம்
அர்ப்பணமாம் அக்கினியில் ஆத்ம ஆஹுதி செய்தல்
அர்ப்பணமாய் அஹங்காரம் ஒடுங்குவதே சமாதி
அர்ப்பணம் செய்தடையும் பொருள் ஆனந்த ப்ரம்மமே

(மூல ஸ்லோகம்) 33. 37. 40. 41. 42.

(ஸ்லோகம்) 33.

பொருள் கொண்டு செய்கின்ற பூசனைகள் தன்னிலும்
மருவிலா ஞானமே மனத்தெளி வுண்டாக்கும்
ஒரு சிறிது மீதமின்றி கர்மங்கள் ஞானத்தில்
எரிந்து உருகறைந்திடும் கற்பூரம் போலாகும்

(ஸ்லோகம்) 37.

காட்டுத் தீக்கட்டையைச் சாம்பலாய் செய்வதுபோல்
வாட்டும் வினை இரண்டும் ஞானக்கினியில் மறையும்
காட்டும் ஞானஒளி ஆத்மாவை தன்னுள்ளே
நாட்டும் தன்னிலையை நானதுவாய்க்காட்டுமே

(ஸ்லோகம்) 40. 41.

சிரத்தையில்லாதவன் சஞ்சல மனமுடையோன்
விருத்தியடையாமல் வீணில் அழிகின்றான்
திரமுடன் யோகத்தால் கர்மத்தின் கட்டறுத்த
பரம ஞானியை எந்த பாவமும் பற்றாது

(ஸ்லோகம்) 42.

அக்ஞானத்தில் பிறந்து அகத்துள் வளர்ந்திடும்
துக்கமாம் சஞ்சலத்தைத் துண்டாக்கு ஞானத்தால்
மக்களெனும் பாசத்தால் மனக்கலக்கமடையாது
இக்கணம் எழுந்து நிற்பாய் இணையில்லா வீரனே

ஐந்தாவது அத்யாயம்

(சன்யாச யோகம்)

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) 1.

கருமத்தை செய்யென்று கட்டளை இடுகின்றாய்
வருமத்துடன் கருமம் வேண்டாமென் றோதுகின்றாய்
இருவிதங்கூறி இடர்ப்படச் செய்கின்றாய்
தெரியும்படி உரைப்பாய் திரும்பவும் எனக்கென்றான்

ஸ்ரீ பகவான் கூறுவது

(மூல ஸ்லோகம்) 2. 3. 5. 6. 7.

(ஸ்லோகம்) 2, 3.

கருமத்தை கூடுவதும் விடுவதும் பலனொன்றே
கருமத்தை விடுவதினும் செய்வது சிறந்ததாம்
விருப்பு வெறுப்பின்றி கன்மத்தை செய்பவன்
ஒருபோதும் கர்மத்தின் கட்டில் அகப்படான்

(ஸ்லோகம்) 5.

ஸாங்கியர்களால் எந்த நிலையடையப்படுகிறதோ
ஈங்கதனைக் கர்மத்தால் யோகியும் அடைகின்றார்
பாங்குடன் இரண்டினையும் பார்ப்பவன் எவனோ
ஆங்கவனே ஆத்மாவை அறிந்த மெய்ஞானி

(ஸ்லோகம்) 6.

கர்மத்தின் துணையின்றி சன்யாசம் பெறலரிது
தர்மத்துடன் கர்மம் செய்பவன் முக்தனும்
கர்வித்தெழும் உள்ளத் துடிப்புடல் துடிப்படக்கி
சர்வத்திலும் என்னைக் காண்போன் கட்டறுந்திடுமே

(ஸ்லோகம்) 7.

உள்ளமும் உடலும் உண்மையிலொடுக்கியே
கள்ளப்புலன்களும் கட்டுக்கடங்கியே
எள்ளினுள் எண்ணைபோல் எங்கும் நிறைந்த என்னைத்
தெள்ளத் தெளிந்தறிந்தால் திரும்பவும் பிறப்பாரோ

(ஸ்லோகம்) 10.

தாமரை இலைமேல் தண்ணீர்போல் மனத்துடையோன்
காமமுடையோர்போல் கன்மங்கள் செய்தாலும்
நாமவர்க்கு என்றும் அன்னியமாய்த் தோன்றிடோம்
தாமியற்றும் பணி எமக்கு தந்தவர் பந்தமுறார்

(ஸ்லோகம்) 11. 12.

மனம் வாக்கு காயத்தால் மாசற்ற யோகிகள்
எனக்கென்று எல்லாப் பணிகளும் இயற்றியே
தனக்கேதும் பற்றின்றி தனித்திருப்பர் அக்ஞானி
அனைத்தும் தாம் செய்வதாய் அஹங்கரித்தழிவாரே

(ஸ்லோகம்) 13.

ஐந்தையும் தன்னுள்ளே அடக்கிய மெய்ஞானி
சிந்தையில் எல்லாக் கருமங்களைத் துறந்து
பந்தமெல்லாங்கடந்து ஒன்பதுவாய் கோட்டைதன்னில்
எந்தப்பணியும் செய்யாது சுகித்தின்புறுகின்றான்

(ஸ்லோகம்) 15, 16.

தமிழ் விருத்தம்

பாபமும் புண்யமும் பரமன் ஏற்பதில்லை
தூபத்தில் அக்னிபோல் ஞானம் மறைந்துள்ளது
ஆபத்தாம் அக்ஞானம் அகன்றால் தன்னாத்மாவை
சோபிக்கும் சூரியன்போல் சுடர்வீசக் காணலாம்

(ஸ்லோகம்) 18.

படித்தவனிடத்தும் பசு யானை தன்னிடத்தும்
அடித்து ஆவினையுண்ணும் புலையர்கள் தம்மிடத்தும்
கடித்து குரைக்கும் நாயிடத்தும் எவரிடத்தும்
பிடித்தம் ஒன்றாய்க்கொள்பவன் ஆத்மஞானி

(ஸ்லோகம்) 19.

சமநிலையால் சாந்தியடைந்திட்ட யோகியர்கள்
தமது பிறப்பிறப்பிங்கே நாமழித்து வாழ்ந்திடுவார்
எமக்கன்னியமாய் ஏதுமறியாது ஞானிக்கு
சுமக்க இங்கேதும் வினையில்லை காண்டேடா

(ஸ்லோகம்) 21.

அடையும் ஆனந்த நிலை அகத்துள் நிறைந்திருக்க
தடை செய்யும் சத்ருவாம் தானென்ற ஆணவத்தை
உடைத்தெரிந்து உள் புகுந்துக்காணும் மெய்ஞானிக்கு
மடைதிறந்த வெள்ளம்போல் ஆனந்தம் பெருகிடுமே

(ஸ்லோகம்) 22.

அழியும் பொருள்களில் ஆனந்தம் தேடுவது
பழியும் பாவமும் சூழவே தொடருமாம்
இழிவாம் பிறப்பிறப்புக்குள்ளாக்கும் வினையிடத்தில்
விழித்திருக்கும் ஞானி வீழ்வானோ விருப்பமுடன்

ஆத்மாவை அறிந்த ஞானி அகத்தினில் ஆசையற்று
மான்போல் ஓடும் மனதை மதியுடன் கட்டிவைத்து
ஊனுடல் உலகந்தன்னில் உற்ற பணி செய்திருக்க
தானேதும் செய்திடாமல் தனித்தின்ப முறுவர்தாமே

(ஸ்லோகம்) 23, 24, 25.

உடல் விழுவதன் முன் உள்ளெழும் ஆசைக் கோபம்
இடக்கு செய்தழித்துடாது இங்குள்ளபோதே எல்லாம்
தடுத்திடும் சக்திபெற்று தன்னிலே தளராதவனே என்னை
அடுத்து வாழ் ஆத்மஞானி அவனேநான் அறிந்திடாயே

தன்னை யறிந்துத் தன்னுள்ளே ஒளிகண்டு
உன்னி உன்னி உள்ளத்தில் ஓயாது இன்புற்று
என்னையே எல்லாமாய்க்கண்ட இறவாத
அன்னிலே இங்கேயே அடைந்தமர்ந்திடுவாரே

எவ்வுயிர்க்கும் இஷ்டராய் இந்த்ரிய வசத்தராய்
கவ்விடும் நல்வினைத் தீவினையற்றவராய்
பவ்வியமாப் பணிந்து பாசங்கள் அற்றவராய்
செவ்விய குணமுடையோர் சென்றடைவார் பரமபதம்

ஆறும் அத்தியாயம்

(த்யான யோகம்)

(ஸ்லோகம்) 1. 2. 3. 4. 5. 6. 7. 8. 9. 10.

(ஸ்லோகம்) 1. 2.

பயனை விரும்பாது செய்வனவெல்லாம் செய்து
மயக்கமடையாத மனமுடையோன் சன்யாசி
செயல் விட்டவனல்ல ஜெகத்தை துறப்பவனல்ல
மயலூட்டும் ஆசைத்துறந்தவனே யோகி

(ஸ்லோகம்) 3, 4.

எவனொருவன் மனம் நாடும் பொருளிச்சை யற்றவனோ
எவன் கருமம் செய்தும் அதன் பலனிச்சையற்றவனோ
எவன் எல்லா எண்ணமும் அடக்கிய துறவியோ
அவனே யோகாரூடன் என்ற உயர் ஞானியாம்

(ஸ்லோகம்) 5, 6.

தன்னைத்தான் உயர்த்திடும் தன்மை வேண்டும்
தன்னைத்தான் தாழ்த்திடல் தகுதியல்ல
தன்னை உயர்த்தியவனுக்குரவு தன்னுத்மாவாம்
தன்னைத்தான் தாழ்த்திடில் தானே தனக்கு பகை

(ஸ்லோகம்) 7, 8.

வெப்பமும் குளிரும் வேதனையும் இன்பமும்
செப்பரிய மேன்மையும் ஜெகத்தின் இகழ்ச்சியும்
ஒப்புடன் ஏற்று உள்ளங்கலங்காது
எப்போதும் என்னையே சார்ந்திருப்போன் ஞானி

(ஸ்லோகம்) 9.

நன் மனத்தோர் தீயோர் நண்பர் பகைவர்கள்
வன் மனத்தோர் வெறுப்போர் உறவினர் அன்னியர்
சன்மார்க்கர் துன்மார்க்கர் சகலரிடத்திலும்
தன் மனம் சமமாய் யுடையவன் சிறந்தவனும்

(ஸ்லோகம்) 10.

தன்னந்தனியனாய் தன்னுள் உடல் அடக்கி
உன்னிடும் ஆசைகளை உள்ளத்தில் சேர்க்காது
பொன் பொருள் தனில் நாட்டமற்றவனாய் எப்போதும்
என்னையே எண்ணி தன்னிலை பெறவேண்டும்

(ஸ்லோகம்) 11, 12, 14, 15.

(ஸ்லோகம்) 11, 12. தமிழ் உரை

சுத்தமான தனியிடத்தில் சுகாசனம் அமைத்து
சித்தம் ஒருமித்து செயல்களெல்லா மடக்கி
நித்திய நியமங்கள் நிஷ்காமமாய்ச் செய்து
அத்தனைப் போற்றுவேன் ஆத்மஞானியாமே

(ஸ்லோகம்) 14, 15.

அலையா மனத்துடன் அச்சமெல்லாமொழித்து
நிலையாக ப்ரம்மசர்யத்தினை அனுசரித்து
குலையா மனத்துடன் குறியாயெனைக்கொண்டு
மலையாது மனதெ தன்பால் வைத்தோன் மஹாத்மாவாம்

(ஸ்லோகம்) 16, 17.

அதிகமாய் உண்பவர்க்கும் ஏதுமுண்ணாதவர்க்கும்
மிதமிலாதுறங்குவோர்க்கும் உறக்கமே
[கொள்ளாதோர்க்கும்
உதயமாகாது ஞானம் உள்ளத்திற் பதிந்திடாது
மிதமான ஊணுறக்கம் உழைப்புள்ளோன்
[யோகியாவான்

(ஸ்லோகம்) 18, 22.

அடங்கிய சித்தத்தோடு ஆத்மாவில் ஆழ்ந்திருப்போன்
இடங்கொடான் ஆசைக்கெல்லாம் ஏதும்
[விரும்பமாட்டான்
கிடைக்கரும் பொருளைப்பெற்றோன் கேவலப் பொருளை
[வேண்டான்
தடுக்கருந் துன்பத்தாலும் தளர்வுற்றழிய மாட்டான்

(ஸ்லோகம்) 23.

துன்பத்தின் தொடர்பறவே தொடங்குவது யோகம்
அன்புடன் யோகத்தை அப்யசித்திடுவாய் நீ
உன்புத்தி தளராமல் உள்ளத்தில் சாந்தியுடன்
என் பக்தனாய் என்றும் இருப்பாய் நீ அர்ஜுனா

(ஸ்லோகம்) 26, 28.

நிலையற்ற நெஞ்சத்தை நெடுக விட்டுவிடாமல்
வலை போட்டிழுத்ததை வசமாயடக்கி வைத்து
நிலையாக ஞானத்தில் நிலைத்திடச் செய்வதே
கலையாத பேரின்ப நிலைகாட்டும் கலையாமே

(ஸ்லோகம்) 31, 32.

எல்லா உயிர்களிலும் எனைக்கண்டு
வல்லான் எவன் வணங்கி வழிபாடு செய்வானோ
கல்லாதவனாய்க் கன்மத்தொழில் புரிவோனாகிலும்
நல்லானவனென்றே நான் கொள்வேன் அர்ஜுனா

(ஸ்லோகம்) 25.

மெள்ள மெள்ள உள்ளத்தை மேன்மையுறச் செய்து
துள்ளி வரும் ஆசைகளை தூரத்தில் தள்ளி வைத்து
கள்ள மனங்காட்டும் கற்பனையில் மயங்காமல்
உள்ளும் புறமும் ஒன்ருய்க்காண் காண்டீபா

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) 33. 34.

சஞ்சல மனத்தினுல் நீ சாற்றிய மொழிகளெல்லாம்
கொஞ்சமும் இதயத்துள்ளே குறித்திடும்
[திறமையற்றேன்
என் செயலேதுமின்றி இழுத்தேகும் மனத்தைக்
[காற்றின்
மிஞ்சிய வேகமென்று அஞ்சுதென் நெஞ்சம் க்ருஷ்ண

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 35. 36. தமிழ் உரை

திடமிலா மனதுதன்னை அடக்குதல் அரிதென்றேனுன்
அடிக்கடி யுந்தனுக்கு அறிவித்தேன் ஆத்ம ஞானம்
அடக்குதற்கரிய மனதை திடபக்தி வைராக்யத்தால்
சடக்கென அடக்கிவைத்து சாந்திபெறல் வேண்டும்
[பார்த்தா
காற்றினும் கடியவேகம்கொண்டேகும் உள்ளந்தன்னை
தேற்றிடல் அரிதென்றேனுன் தெரிவித்தேன்
[உந்தனுக்கு
போற்றிடும் புத்தியாலே புனித வைராக்யத்தாலே
தோற்றிடச் செய்வாய் மெய்க் கூற்றமாம் சஞ்சலத்தை

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) **37, 38, 39,**

சாதனைகள் செய்தும் ச்ரத்தை இல்லாதவனும்
மாதவத்தில் நழுவும் மனமுடையோன் சித்தியில்
ஏதும் பயனின்றி இரு மார்க்கமும் துறந்து
வேதனைக்காளாய் வீணில் அழிவானே

(ஸ்லோகம்) **38, 39,**

பக்தி மார்க்கத்தில் சென்று பாதியில் விட்டவர்க்கு
சித்திக்கும் பலனேது செப்புவாய் ஸ்ரீ க்ருஷ்ணு
புத்திக்கும் தெளிவின்றி புகலடைந்தேன் உந்தனையே
முக்திக்கிடமான மூலப்பொருளே உரைப்பாய்

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) **40, 41. 42, 43, 44, 46, 47.**

(ஸ்லோகம்) **40, 41.**

நற்செயல் புரிந்தவர் நாசமடைந்திடார்
முற்பிறப்பில் செய்த தவம் முன்னுலெதிர் நிற்கும்
தற்பரமாம் யோகத்தில் தவறியவர் மறுபடியும்
பொற்புமிகும் புண்ணியர்தம் வீட்டில் அவதரிப்பார்

(ஸ்லோகம்) **41.**

ஒருதரம் உள்ளன்புடன் என்னைப் போற்றியவர்
கருமத்தில் மறுபடியும் கட்டுப்பட்டழியார்கள்
மறுபடியும் ஞானியின் குலத்தில் அவதரித்து
பெரும்பதவி எய்துவார் பிறப்பிது அருமையாம்

(ஸ்லோகம்) 43.

சித்தியில் நழுவியவன் சீக்கிரம் அதைத்தொடர்ந்து
முக்திக்கே முயன்று மோக்ஷமடைந்திடுவான்
சித்தத்தை என்பால் வைத்தவன் தாழ்வுறான்
பக்தரைக் காப்பதென் பாரங்காண் அர்ஜுனா

(ஸ்லோகம்) 44.

பூர்வத்தில் செய்துவிட்ட புண்ணிய கருமத்தால்
ஆர்வமுடன் தானே ஆத்மஞானம் பெற்று
நேர்வழியிலென்னை நேமமுடன் பூஜித்து
சேர்வரென்னை எல்லாத் தடைகளும் தாண்டியே

(ஸ்லோகம்) 46.

கற்றோர் கர்மம் செய்வோர் கடுந்தபசி தன்னிலும்
அர்ப்பணமாய் அனைத்தும் செய்யோகிகளைக்காட்டிலும்
தற்பெருமை இல்லாது தாழ்ந்தென்னைப் பணியும்
நற்பிறவி கொண்டவனாய் ஆவாய் நீ அர்ஜுனா

(ஸ்லோகம்) 47.

உள்ளத்தில் ஊன்றிய உண்மையாம்அன்பினால்
கள்ளத்தனமின்றி கனிவுடன் போற்றிடுவோர்
பள்ளத்தில் பாய்ந்து வரும் நீர் போலென்னையடைவார்
விள்ள முடியா மகிமையுடையவன் யோகி என்பேன்

த்யான யோகம் முடிந்தது

ஏழாம் அத்தியாயம்

(ஞான விஞ்ஞான யோகம்)

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 1, 2, 3.

என்னிடத்தில் பதிந்த மனத்துடையவனாய்
என்னையே கோரி யோகத்தை அப்யஸித்து
பின்னை எழும் சந்தேகம் முற்றும் ஒழித்தென்னை
உன்னுள் அறியும் உபாயம் உரைப்பேன் கேள்

எதனை அறிந்தவர் எல்லாம் அறிந்தவரோ
எதனை அறிந்தபின் அறிவதற்கொன்றில்லையோ
எதனை விஞ்ஞானமென வேதங்கள் தேடுமோ
அதனை உனக்குறைப்பேன் அர்ஜுன கேட்டிடுவாய்

ஆயிரத்தில் ஒருவர் அறிய முயற்சிப்பவர்
தீயிடை மெழுகுபோல் உருகுவோர் லக்ஷத்தொன்று
போயடையும் சித்தர்கள் கோடியிலொருவரே
வாயினுற் கூறவகையாமோ என்னருளை

(ஸ்லோகம்) 7.

என்னிலும் உயர்ந்தொன்றை எங்கிலும்
[காணமாட்டாய்
மன்னிடும் கயிற்றில் கோத்த மணிகள் போல
[அண்டமெல்லாம்
தன்னிலே தவறுதெந்தன் தண்ணருள் தன்மையாலே
பின்னமுற்றழியாதுள்ள பெருமை அறிந்திடாயே

(ஸ்லோகம்) 10, 11.

அனைத்துக்கும் ஆதியாம் வித்து நான் என்றறிவாய்
வினைத்திறம் மிக்க வீரமும் விவேகமும்
எனை நினைந்து தனை மறந்த ஜீவர்கள் உள்ளத்தில்
நினைக்கும் ஆசைப்பொருள் நான் என்றுணர்வாயே

(ஸ்லோகம்) 13, 14.

முக்குணத்தால் உலகெல்லாம் மோகம் அடைந்துளது
சிக்கலாம் மாயை என் சக்தியாலியங்கிடினும்
அக்கட்டில் யானேதும் அகப்படுவோனல்லன்
இக்கட்டறுத்தவன் என்பதம் எய்திடுவான்

(ஸ்லோகம்) 14.

கடக்கறிய மாயையை கடக்கும் உபாயங்கேள்
திடமுடன் என்னையே சரணடைவதே
அடக்கி ஐம்புலனையும் ஆசைஎனும் மாசகன்றால்
படகுபோல் நானவரை பவக்கடல் கடத்துவிப்பேன்

(ஸ்லோகம்) 15, 16, 17,

பாபத்தில் உழல்பவரும் பயனற்ற பதர்களும்
தாபமென்னும் மாயையால் தவிக்கும் அக்ஞானியும்
கோபமிகும் அசுரகுணங் கொண்டவரும் அறியார்கள்
தீபம்போல் உள்விளங்கும் என்னருள் சுடரொளியை
நால்வகை பக்தர்கள் நாளும்என்னை பூசிப்பார்
பால்வகுத்துக் கூறிடினும் பயனடைவதொன்றேதான்
நால்வரில் ஞானியே என்னுள் கவர்ந்தவனும்
மால்கொண்டான் ஞானிஎன்மேல் நானுமவன்
[அன்பனே

(ஸ்லோகம்) 18, 19. 21, 27, 29, 30.

துன்புற்றோர் செல்வத்தை நாடுவோர் கலைவாணர்
என்பக்தனும் ஞானிஎவர்க்கும் சிறந்தவனும்
அன்பனவன் நானென்றே அறிவாய்நீ அர்ஜுனா
முன்பவம் தீர்ந்தவன் என்பதம் எய்துவான்
பலபிறவி கடந்தபின் பக்தன் எனை யறிகின்றான்
சலனமற்று சர்வமும் நானென்று காண்கின்றான்
கலங்கிடான் கர்மத்தில் கட்டுபடா மஹாத்மாவாம்
உலகிலவன் உத்தமன் உயர்கதி யடைகின்றான்
எவரெவர் எங்கெந்த தெய்வமாய் வழிபடினும்
அவரவர் விரும்பிய வாரளித்தவர் சித்தத்தில்
தவறாமல் பூசிக்க தக்கபடி அருள் செய்வேன்
நயமாயவரவர் நிலைக்குகந்தபடி அருள்வேன்
உருவெடுத்தபோதே உடன் தோன்று மாயத்தால்
இருவினைக் கிணங்க இச்சைவெறுப் பேற்படுதல்
திருந்துவதிற் பயனில்லை திருவருளை நாடுவதே
பெருத்தபயனடைந்திடுவார் எனைப்பணியும் பக்தர்களே

ஞான விஞ்ஞான யோகம் முடிந்தது

எட்டாம் அத்தியாயம்

(அக்ஷரப்ரஹ்ம யோகம்)

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) 1. 2.

எது ப்ரம்மம் என்றுரைப்பாய் ஏ புருஷோத்தமா
அதிபூதம் அதிதைவம் அத்யாத்ம மெதுசொல்வாய்
விதித்துள்ள இவ்வுடலில் அதியக்ஞன் யார்கண்ணு
துதித்துயிர் விடும்பக்தர் கெவ்வாறு தோன்றுகிறாய்

(ஸ்லோகம்) 3. 4. 5. 6. 7. 8.

எல்லைப் பொருளாய் உள்ள தக்ஷப்ரஹ்மமாம்
நில்லா உடலில் அதுநிற்பது அத்யாத்மமாம்
சொல்லா மறைபொருளாம் ஆத்மாவே அதிதைவம்
எல்லா என்செயலும் அதியஜ்ஞ மென்றறிவாய்

அழியும் இயல்புடைய தெல்லாம் க்ஷரமென்றும்
அழியும் இவ்வுடலில் அதிபூதம் நானென்றும்
அழியாப் பொருளாம் அதிதெய்வ மென்றும்
அழிவற்ற என்லீலை அதியஜ்ஞ மென்றறிவாய்

உத்தம ஞானிகள் உயிர்விடும் காலத்தில்
சித்தத்தில் என்னையே சிந்தித்து ஓம்என்று
நித்தியப் பொருளை நினைத்திங்கே முக்தியை
சத்தியமாய் அடைகின்றார் சந்தேக மில்லையே

மரணுந் தரத்திலெவன் மனதிலென்னை த்யானித்து
சரணுகதியா யென்னை ஸ்மரித் துயிர்விடு வானே
பெருநாளிடத் தவர்க்கு பேரின்பம் தந்திடுவேன்
கருநாடா வகையவர்க்கு கைவல்ய பதமளிப்பேன்

எக்காலத்திலும் என்னை எண்ணி இருப்போர்க்கு
துக்கமாம் பிறப்பில்லை தொடரும்வினை இல்லை
இக்கணமே எல்லாம்நீ எனக்கற்பணம் செய்து
தக்கபடி போர்செய்து தரணியாள்வாய் பார்த்தா

இடைவிடா யோகப் பயிற்சியால் எனைஎண்ணி
தடைபடா அன்புடன் த்யானித்து உள்ளத்தில்
சுடர்விடும் ஜோதியாம் பரமனைக் கண்டவர்கள்
அடைந்திடுவார் அவன் பதம் ஐய்யமில்லை அர்ஜுனு

(ஸ்லோகம்) 9, 10, 11.

என்றும் இருப்பவனுய் எல்லாம் அறிந்தவனுய்
நன்று தீதளிப்பவனுய் அணுவாய் அகண்டமாய்
ஒன்றுய் உலகாள்பவனுய் உன்னர்க்கரியவனுய்
குன்றுச் சுடரொளியாய் மாயை இருள்கடந்தவனை

உயிர்விடும் காலத்தில் உள்ளார்ந்த பக்தியுடன்
வயிரம் போல்வலிமையாம் மனத்தினனுய் யோகத்தில்
தைரியமாய் நிலைத்து த்யானித் துயிர்விடுவோர்
ஜயித்திடுவார் மாயையை சார்ந்திடுவார் என்பதத்தில்

மறையுணர்ந் தோர்எதனை அழிவற்றதென் பாரோ
சிறையற்ற சன்யாசி எதைபுகல் அடைவாரோ
குறைவற்ற ப்ரம்மசர்யம் எதற்கனு சரிப்பாரோ
வரையற்ற அன்னிலையை வகுத்துனக் குரைத்திடுவேன்

(ஸ்லோகம்) 12, 13, 14, 15, 16.

இந்திரிய வாயிலை இழுத்துமூடி இதயத்தை ஏகாக்ர
[சித்தமாக்கி
பந்தித்து ப்ராணனை உச்சிக்கேற்றி ப்ரணவத்தை
[உச்சரித்து யோகத் தாழ்ந்து
சிந்தித்து என்னையே த்யானித் துடலைச்சிக்கென விடுத்
[தேவன் செல்கின்றானோ
எந்திரு வடிவந்தோன் றும் இன்ப முற்று என்னைப்
[பிரியாமல் வாழ்ந்திருப்பார்

எப்போதும் இடைவிடா த்யானத்தால் என்னையே
தப்பாமற் சிந்திக்கும் ஞானிக்கெளிய வன் நான்
மூப்பாழும் தாண்டி இப்பார் துயர் நீங்கி
குப்பாசப் பிறப்பொழிந்து ஒப்பில்லா பதமடைவார்

ப்ரம்ம லோகம்முதல் ப்ரளயத்தில் அழிவுறும்
எம்மை யடைந்தவர் என் றும் அழிவுறார்
இம்மையும் மறுமையும் இறப்பு பிறப்பில்லா
செம்மையாம் கைவல்ய பதம்பெற்று வாழ்ந்திடுவார்

(ஸ்லோகம்) 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27.

சூரியன் வந்ததும் சூழ்இருள் நீங்குதற்போல்
பாரில் என் சக்தியால் ப்ரளயமும் ச்ருஷ்டியும்
மாறுவரும் பகலிரவு போல் தோற்றம் மறைவிதனை
நேரில் கண்டறிந்தவர்கள் நித்திய முக்தர்களாம்

எப்பொருளின் தோற்றமும் என் றும் உடையதே
அப்பப்போது தோன்றி அழிவதுபோல் காண்கிறது
இப்படியே என் றும் என்மாயையால் ப்ரக்ருதியும்
செப்படி வித்தைபோல் ஜெகத்தை உண்டாக்குவதும்

உலகத்தை உண்டாக்கி காத்து ஒடுக்கும் நான் அதில்
கலப்பதில்லை உலகக் கட்டிற் சிக்குவதில்லை
பலஅண்டம் அழிந்தாலும் படைப்பவன்நான்
[அழிவதில்லை
துலங்கும் பொருள்களுக் கப்பால் இருப்பவன்நான்

அவ் யக்தமாயுள்ள தக்ஷா ப்ரம்மமாம்
திவ்யமாம் என்பதம் அதுவென்று அறிவாய்நீ
பவ்வியமாய் பக்தியினல் பரமபதம் அடைந்தவர்கள்
இவ்விருள் மார்க்கத்தில் என்றும் வருவதில்லை
[பார்த்தா

எக்காலம் உயிர்நீத்தால் இம்மைப் பயனறுமோ
துக்காலய மாம்பிறவி தீரும் வழியெதுவோ
அக்காலம் தன்னை அறிய உனக்குறைப்பேன்
சிக்காம் வினையறுத்துச் சேருவாய் என்பதத்தில்

உத்தராயணம் ஆறுமாதங்கள் வளர்பிறையில்
மத்தியான்ன போதில் மரணமடைந்த வர்கள்
சித்தி யடைந்திடுவார் ஜென்மம் இனியடையார்
முக்தியது க்ரமமென்று முன்னோர் வகுத்தார்கள்

இரவு இருள்மார்க்கம் தக்ஷிணயனத் தினில்
கரைந்திடும் தேய்பிறையாம் க்ருஷ்ண பக்ஷந்தன்னில்
மரண மடைந்திடுவோர் மறுபடியும் பிறந்திடுவார்
இருவழியும் அறிவித்தேன் ஏமாறுதெனை பஜிப்பாய்

வேதமோது தலிலும் வேள்வி செய்வதினிலும்
மாதவம் தானங்கள் செய்தடையும் பலனெதுவோ
ஏதமில்லா யோகி இவையாவும் கடந்து சென்று
சாதல் பிறத்த லில்லா சாந்திநிலை எய்துகின்ருன்

(ஸ்லோகம்) 26, 30.

பிறப்பு மூப்பிறப்பென்னும் பெருந்துன்பம் நீங்கிட
மறவாம லெப்போது மெனேபோற்று மன்பர்க்குக்
கரவாம லென்னுருவைக் காட்டியருள் செய்வேன்
பிறவா வரம்தந்து ப்ரம்மமாய்ச் செய்திடுவேன்

அதிபூதம் அதிதைவம் அதியஜ்ஞ மென்றென்னை
விதியுடன் பூசித்து வினைதீர்ந்த ஞானியர்கள்
துதித்துயிர் விடும்போதும் தூயமனத்தினராய்
கதிஎன்ற றிந்தென்னை கருத்தொன்றி நினைத்திடுவார்

அக்ஷரப்ரம்ம யோகம் பூர்த்தி

ஒன்பதாம் அத்யாயம்

(ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்)

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 2, 4, 5, 6, 7, 9, 10, 11, 12, 13, 14.

வித்தைக்கெல்லாம் அரசும் மெத்தரஹஸியப் பொருளும்
சித்தத்தைத் தூய்மைப் படுத்துவதிற் சிறந்ததும்
நித்தியமாய் நேரில் கண்டறிந்து உணர்வதும்
பத்தியுடன் செய்வதற்கு மிகஎளிய யோகமிது

பார்க்க அறிதாம் என்னுல் பாரெல்லாம் நிறைந்துளது
ஈர்த்திடும் என்னிடம் இவையுள்ள தன்றி நான்
சேர்ந்திருப்பதில்லைஎன் ச்ருஷ்டியில் ஒருநாளும்
யார்க்கும் அறியொணுதென் தெய்வநெறி எல்லாம்

எப்பொருளும் என்னிடம் இருப்புடைய னவல்ல
செப்பரும் தெய்வீகமாம் எந்தன் சக்தியே
இப்பொருள்கள் யாவும் படைத்துள்ள தன்றிநான்
எப்போதும் இருவினைக்கும் அப்பால் இருப்பவன்

வானில் இடங்கொண்ட வாயுவின் தன்மைபோல்
நானிவற்றில் ஒட்டாமல் நடத்துகின்றேன் அண்ட
[மெல்லாம்
கானல் நீர்போல் உலகம் கல்ப முடிவில் மறைந்து
மானிலமெல்லாம் மீண்டும் ச்ருஷ்டியில் வெளிப்படுமே

பயனில் விருப்பின்றி பற்றற்று யான்செய்யும்
செயலேதும் எந்தனைச் சாராது இவை எல்லாம்
இயக்கிடும் இயற்கையின் வசமாய் சூழல்வ தன்றி
மயக்கிடும் மாயை எனக்கடங்கியது அர்ஜுன

என்மகிமை அறியாமல் ஏமாறும் மூடர்கள்
கன்மத்துக் கிடமாய் கர்வித் தழிகின்றார்
தன்னகம் பாவத்தால் என்னருள் நாடிடார்
ஜென்மித் திறந்துழலும் அசுரகுணமுடை யோர்கள்

பத்தர்கள் மஹாத்மாக்கள் பரிவுடன் எந்தனை
சித்தத்தில் எப்போதும் சிந்தித்துலகை மறந்து
எத்தையும் என்வடிவாய்க் கண்டு மெய்யன்புடன்
நித்தியமும் பூசித்து முத்தியடைந் திடுவார்

என்னைத் துதித்து என்புகழையே பாடி
தன்னை மறந்தென்னை த்யானிக்கும் சிந்தையராய்
முன்னைத் தீவினைகள் முற்றும் அழிந்தவர்கள்
நன்னிலை பெற்றென்னை நாளும் பணிவார்கள்

(ஸ்லோகம்) 16 17, 18, 19, 22, 23, 24, 25, 26, 27, 28.

பஞ்சமஹா யக்ஞும் நான் வேள்வி பிதுர்பிண்டமும் [நான்
தஞ்சமளித் தனைத்துயிர்க்கும் ஊண் உடை அளிப்பவன் [நான்
வஞ்சக் கொடுநோய் தீர்க்கும் மணிமந்த்ர ஔஷதம் [நான்
உஞ்சடங்கில் அக்கினியும் நெய்யும் ஹவிஸும் நான்

ஜகத்திற்கு தாய்தந்தை பாட்டன் தாங்குப வன்நான்
பகரொணு ஓங்காரப் பொருளும் பரிசுத்தமும் நான்
தகவுடன் கற்ருேனும் வேதங்களும் நானே
மிகஉரைப்பது வீண் இங்குள்ளன வெல்லாம் நானே

(ஸ்லோகம்) 19, 19.

பதியும் கதியும் பர்த்தாவும் பார்ப்போனும்
வதியுமிடம் வாழ்வு வருத்தம் தீர்க்கும் நேயன்
உதிக்குமிடம் உறைவிடமும் இருப்பிடமும் எப்பொருட்
[க்கும்
கதியும் அழிவற்ற வித்தும் நான் அர்ஜுனு

காயும் வெய்யிலும் நான் கனத்த மழையும் நான்
தீயும் படிக்கு மழை இல்லாமற் செய்பவன் நான்
சாயும் படிஉடலைச் சவமாக்கும் காலன் நான்
மாயும் பிறப்பொழிக்கும் அமுதம் அளிப்பவன் நான்

(ஸ்லோகம்) 22.

வேறு சிந்தனை யின்றி வேண்டிஎனை போற்றுவார்
யாராயினும் அவரைக் காப்பதென் கடன்கண்டாய்
மாறுபாடில்லா மனமுடைய பக்தர் வினை
தீரும்படிச் செய்தவரை தினமும் நான் காக்கின்றேன்

(ஸ்லோகம்) 23,2 4.

எந்த தெய்வத்தையும் இஷ்டமுடன் பணிந்து
வந்திக்கும் பக்தரும் என்னையே அடைகின்ருர்
அந்தந்த பூசையின் பலனளிக்கும் ஆண்டவன் நான்
முந்தை வினைப்படியவர்க்கு முக்தியளித் திடுவேன்

(ஸ்லோகம்) 25.

தேவர்களை வழிபடுவோர் தேவலோகம் அடைவார்
ஆவலுடன் பிதிருக்களை ஆசரிப்போர் அவராவார்
பாவமே பெறுவார் பைசாச பூசை செய்வொர்
சாவதில்லா சாச்வதமாம் பதம் பெருவார் என்பக்தர்

(ஸ்லோகம்) 26, 27.

பச்சிலையோ பூவோ பக்தியுடன் தண்ணீரோ
இச்சையுடன் எனக்களித்தால் ஏற்றிடுவேன் [இன்பமுடன்
எச்சமயம் எதனைநீ செய்தாலும் அவை யெல்லாம்
மிச்சமின்றி எந்தனுக்கு அர்ப்பணமாய்ச் செய்திடுவாய்

(ஸ்லோகம்) 28.

புண்ணிய பாவமாம் திண்ணிய கட்டறுத்து
எண்ண மெல்லாம் என்னடியிற் வைத்துன் பணிசெய்து
தண்ணருள் ஞானத்தால் தணிந்த உள்ளத்தனாய்
நண்ணறிய என்பதத்தை நலமுடன் வந்தடைவாய்

(ஸ்லோகம்) 29, 30, 31, 32, 34.

எல்லா உயிரிடத்தும் ஏகமாய் இருப்பவன் நான்
பொல்லாதவ னென்று வெறுப்பதில்லை ஒருவன்
நல்லா னென்றவனை நாடி வருவதில்லை
வல்லாரென் பக்தர்க்கு வசமாவேன் அர்ஜுனா

(ஸ்லோகம்) 30.

தீயொழுக்கம் மிக்கவனும் திருவடி சரணடைந்தால்
காயொத்த அவன் மனமும் கனிந்திடச் செய்திடுவேன்
சேயொத்த வராயவரைச் சேர்த்து அணைத்திடு வேன்
மாயத்திடம் அவரை மறுபடியும் காட்டிடேன்

(ஸ்லோகம்) 31, 32.

நற்சிந்தை கொண்டவன் நாசமடைந்தி டான்
சர்ச்சைக் கிடமின்றி சாந்தி யடைகின்றான்
பற்பல வருணத்தவரும் ஆண் பெண் அனைவர்களும்
தற்பரமாம் என்பதத்தைத்தாம் வந்தடை கின்றார்

(ஸ்லோகம்) 34.

என்னிடம் மனம் வைத்து என் பக்தனாகவும்
என்னை பூஜிப்பவனாய் என்னையே நமஸ்கரிப்பாய்
என்னையே இவ்வாறு எல்லாமாய் கருதி நீ
என்னை மறவாதிருந்து என்னிடத்தில் வந்தடைவாய்

ராஜவித்யா ராஜகுஹ்யயோகம் முடிந்தது.

பத்தாவது அத்யாயம்

விபூதி யோகம்

ஸ்ரீ பகவான் கூறுவது

தமிழ் உரை

(ஸ்லோகம்) 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11.

வலிமிகும் தோளுடையாய் வாசவன் புத்திரனே
சலிக்காம லுந்தனுக்கு சத்தான பொருளுரைப்பேன்
மெலிவடையா மனத்துடன் மேலும் என்மொழி [கேட்பாய்
மலைநிகர்த்த என்மகிமை உரைப்பேன் நான் உந்தனுக்கு,

தேவர்க்கும் முற்பட்ட தேவாதி தேவன் நான்
மேவ அறியவன் நான் மஹரிஷிகள் முனிவருக்கும்
ஆவலுடன் அகத்தினுள் அறிய முயல்பவனுக்கு
பாவமெல்லாம் நீக்கி பரகதி தந்தருள்வேன்

புத்தியும் ஞானமும் மதிமயக்க மின்மையும்
சத்தியம் பொறுமையும் அகம்புற மடக்குதல்
சித்திக்கும் இன்பமும் துன்பமும் பிறப்பும்
நத்திடும் அச்சமும் அவை இல்லா ஆண்மையும்

அஹிம்சையுடன் சமத்ருஷ்டி போதுமென்ற நன்மனம்
மிஹத்தவம் தானமுடன் கீர்த்தியுடன் அபகீர்த்தி
ஸஹஜமாய் இவ்வாறு காணும் நிலை எல்லாம்
இஹத்தி லென்னிடமிருந்தே எல்லாம் தோன்றிடும்
[பார்த்தா

என்னுடைய பெருமையை எவன் அறிகின்றனோ
அன்னவனே அசைவற்ற யோகத்தில் நிலைத்தவனாய்
மண்ணும் உலகனைத்தும் என்னாலியங்குவது
தன்னையறிந்தவர் என் தாட் பணிகின்றார்

சித்தத்தை என்பால் வைத்துயிர்க்குயிராய் போற்றும்
உத்தம பக்தர்கள் ஒருவர்க்கொருவர் கூறி
நித்திய மென்லீலைகளை நேர்மையுடன் எடுத்துரைத்து
மெத்தவும் ஆனந்த மெய்தித் துதிக்கின்றார்

நிலையான அன்புடன் நேசிக்கும் பக்தர்கள்
தொலையானவ னென்றென்னை தூரத்தில் காண்பதில்லை
குலையாத புத்தியினால் கூடும் உபாயத்தை
சிலையில் எழுத்துப் போல் சித்தத்தில் பதிக்கின்றார்

அருளாலே அன்பர்களின் உள்ளத்தில் நின்று நான்
இருளான அக்ஞானம் நீக்கி ஞானச்சுடராய்
மருளாதெதனைக்காட்டி மறைவின்றித்தோன்றுகின்றேன்
பொருளா யெனைப் போற்றும் புண்ணியராம் பக்தருக்கு

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) 12, 13.

பரப்ரஹ்மன் பரந்தாமன் பரமபாவனன் நீயே
வரநாரதர் அஸிதர் தேவலரும் வ்யாஸரும்
பரதெய்வம் நீயென்று பாடிப்பணிந்துள்ளார்
கருணையுடன் நீயுமதை கற்பித்தாய் எந்தனுக்கு

(ஸ்லோகம்) 14.

நீ கூறுவதெல்லாம் நிஜமென்று உணர்கின்றேன்
வ்யாகூல மெல்லாம் விலகிற்று உன்னுடைய
மாகாருண்யத்தினை மதிப்பிடற் கெளியதோ
ஆகாது தேவர்க்கும் அறிவதற்கு அறியவன் நீ

(ஸ்லோகம்) 15.

உலகைப் படைப்பவன் நீ உலக நாயகன் நீ
உலகை ஆள்பவனும் நீயன்றோ புருஷோத்தமா
உலகில் உன்னருளை உணர்த்துவதுன் னருளன்றி
உலகியல் காட்டுமோ உன்னருளை கேசவா

(ஸ்லோகம்) 16.

எங்கெந்த பொருள்களாய் இவ்வுலகில் நீ நிறைந்து
உந்தன் அருள் திறத்தை உணர்த்துகின்றுயோ அதனை
எந்தனுக் குரைப்பதற் கேற்றவன் நீயன்றோ
சிந்தைத் தெளிவடைய செப்பிடுவாய் ஸ்ரீகிருஷ்ணு

(ஸ்லோகம்) 17, 18.

உன்னுடைய மகிமையும் உன்யோக சித்தியும்
என்னவிதமாய் நீ சிந்தித்தற் குரியவனே
இன்னமுத மன்ன இனிய மொழிகளால்
உன்னடியா னெனக்குரைப்பாய் ஜனார்த்தன

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 19.

ஆதியந்த மில்லா என் ஆத்ம விபூதிக்கு
ஏதிங் குரைத்திடற்கு எவர்க்கும் திறமில்லை
சேதிசிலவற்றை சிறிதுனக்குக் கூறுகின்றேன்
நீதிமிகும் குருச்ரேஷ்டா நீயன்புடன் கேட்பாய்

(ஸ்லோகம்) 20, 21.

எல்லாப் பிராணிகளின் இதயத்தில் உள்ளவன் நான்
எல்லாப் பொருள்களுக்கும் ஆதிநடு அந்தமும் நான்
எல்லா ப்ரகாசத்திலும் சூர்யப்ரகாசம் நான்
பல்லாயிரங் கதிர் வீசும் ரவியும் நான் மரீசி நான்

(ஸ்லோகம்) 22.

வானில் சுடர்வீசும் கோட்களில் சந்திரன் நான்
வானில் வாழ் தேவர்களில் இந்திரனும் நான் பார்த்தா
வானின் றெழும் மறையில் ஸாமவேதம் நானே
ஊனில் மனம் புலனைந்தும் உயிர் உணர்வும் அறிவும் [நான்

(ஸ்லோகம்) 23, 24.

ருத்திரரில் சங்கரன் நான் யக்ஷரில் குபேரனும் நான்
நித்திய வஸுக்களில் நெருப்பும் நான்
புத்திமிகும் பிரகஸ்பதியும் நீர் நிலையில் ஸமுத்திரமும்
சத்திமிகும் சேனைபதி ஸ்கந்தனும் நான் பார்த்தா

(ஸ்லோகம்) 25.

மகரிஷியில் ப்ருகுவும் நான் அக்ஷரத்தில் ஓங்காரம்
ஜகத்திலுயர் வேள்வியாம் ஜபயக்ஞும் நான் மலையில்
மிக உயர்ந்த இமயமும் மரத்திலரசும் நானே
நிகரிலா தேவரிஷி நாரதரும் நான் பார்த்தா

(ஸ்லோகம்) 26, 27.

அந்தமிகும் கந்தர்வரில் சித்ரரதன் நானே
சிந்தை தெளி சித்தர்களில் கபிலமாமுனி நானே
விந்தை அமுதத்துடன் உதித்த உச்சைசிரவப்பரியும்
மந்த நடையானை ஐராவதம் மனிதரில் அரசன் நான்

(ஸ்லோகம்) 28, 29.

ஆயுதத்தில் வஜ்ரம் நான் ஆவினத்தில் காமதேனு
மாயும் பிறப்பளிக்கத் தூண்டும் காமனும் நான்
பாயும் விஷமுள்ள பாம்புகளில் வாசுகீ நான்
சாயும் உலகைத் தாங்கும் சர்ப்பம் ஆதிசேஷன் நான்

(ஸ்லோகம்) 30, 31.

ஜலத்தில் வாழ் ப்ராணிகளின் தலைவன் வருணன் நான்
திலதர்ப்பண மேற்கும் பிண்ட பித்ரு தேவதை நான்
கலக்கமுற வந்தடக்கும் காலன் நான் காண்டீபா
பல மிகுந்த அசுரரில் ப்ரகலாதன் பார்த்தா

(ஸ்லோகம்) 32, 33,

கணக்கெடுத்துக் காட்டும் காலன் நான் ம்ருகங்களில்
துணிவுடைய சிங்கம் நான் பறவைகளில் கருடன் நான்
வணங்கும் வாயுவும் நான் வாள்வீரன் ராமன் நான்
பணியும் ஆறுகளில் கங்கை நான் மகாமீன் நானே

(ஸ்லோகம்) 32, 33.

படைப்பின் அடிநடுவும் முடிவும நான் அர்ஜுனு
தடையற்ற அத்யாத்ம வித்தை நான் வாதமும் நான்
நடைமுறை எழுத்தில் அகாரம் சேர்க்கும் அக்ஷர
[வகையும்
இடையின்றி இருப்பவன் பார்ப்பவன் காப்பவன்
[தண்டிப்பவன் நான்

(ஸ்லோகம்) 34.

மரணமெனும் மறைப்பும் தோற்றமெனும் பிறப்பும்
கருணையுள்ள பெண்ணினத்தில் கமலத்தில்வாழ் திருவும்
வரமளிக்கும் வாக்தேவி வாணியும் கீர்த்தி புத்தி
தருணத்தில் காத்திடும் தயை சாந்தி உறுதியும் நான்

(ஸ்லோகம்) 35.

ஸாமகானங்களில் ப்ருஹத் ஸாமகானம் நான்
நேமமிகு மந்திரத்தில் காயத்ரி சந்தஸும் நான்
க்ஷேம மளிக்கும் மாதம் மார்கழி மாதம் நான்
காமனுகக்கும் வஸந்தருதுவும் நான் காண்டீபா

(ஸ்லோகம்) 36.

சக்தியுள்ளோரிடமும் வீரமும் வெற்றியும் நான்
நத்தியே வஞ்சரிடம் சூதாகவும் உள்ளேன்
சத்துவகுணமாய் நான் சாத்வீகரிட மிருப்பேன்
எத்திலும் தளராத முயற்சி என்பதும் நானே

(ஸ்லோகம்) 37.

வஸுதேவ புத்திரன் வாஸுதேவன் நானே
வாசவன் புத்திரன் பார்த்தனும் நானே
இசைக்கரிய மாமுனிவர் வ்யாஸரும் அசுரகுரு
உசனகவி என்ற சுக்ராசாரியரும் நான்

(ஸ்லோகம்) 38, 39.

அசத்தியத்தை அடக்கும்நீதி நான் ஜெயமும் நான்
ரசமிகும் ரகசியத்தில் மௌனமும் ஞானமும் நான்
அசையும் பொருள் அசையாப் பொருள் யாவும் நானே
[பார்த்த
நிசமாய் உனக்குரைத்தேன் நீயறிந்துத் தெளிவாயே

(ஸ்லோகம்) 40.

எல்லாப் பொருளுக்கும் எதுவித்தோ அது நானே
நல்லாய் அர்ஜுனா நானின்றி ஏதுமில்லை
பல்லாயிரக் கணக்கிலென் படைப்பின் உயர்வெல்லாம்
சொல்லால் வகுத்துக் கூறுரு தெவர்க்குமே

(ஸ்லோகம்) 41.

எவை எவை என்னருள் நிறைந்து விளங்குவதோ
எவை எவை லக்ஷ்மீ கடாக்ஷம் நிறைந்துளதோ
எவை எவை சக்தி மிகுந்ததாய் காண்பதோ
அவை யெல்லாம் என்னுடைய அம்சமென்றறி வாயே

(ஸ்லோகம்) 42.

என்சக்தி யறிவதில் ஏது பயன் அர்ஜுனா
என் சக்தியின் சிறிய பகுதியே உலகெல்லாம்
தன் யோக சக்தியால் தாங்குவதன்றி நான்
என் சக்தி யாலேதும் ஏற்பதில்லை பார்த்தா

விபூதி யோகம் முடிவடைந்தது.

பதினோராவது அத்யாயம்

(விஸ்வரூப தர்சன யோகம்)

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) 1.

எனக்கருள் செய்யநீ எடுத்தோதிய தெல்லாம்
மனதில் இடம் பெற்றேன் மோகம் ஒழிந்தது
உனதாத்ம தத்துவத்தை உணர்ந்தேன் தாமரைக் [கண்ணு
தினமும் உயிர் தோற்றமும் நாசமும் நானறிந்தேன்

(ஸ்லோகம்) 3, 4.

எவ்வாறு உன் மகிமை எடுத்துரைத்தாயோ நீ
அவ்வாறே உன்னை நான் அறிகின்றேன் என்னிலும்
இவ்வாறுன் வடிவத்தைக் காணவும் விருப்புற்றேன்
ஒவ்வாதவன் எனக்கருதாது உன்னுருவை காட்டியருள்

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 5, 6.

அருள் நிறைந்த என் தெய்வ வடிவத்தை பல்வகையாம்
உருவத்தில் கணக்கின்றி காணிப்போ காண்டீபா
மருத்துக்கள் உருத்திரர்கள் ஆதித்யர் வஸுக்களையும்
பெரும்புகழ் அச்வனி தேவர்களையும் பார்த்திடுவாய்

(ஸ்லோகம்) 7, 8.

இங்கு என் தேகத்துள் இருக்கும் உலகெல்லாம்
மங்குமுன் கண்களாற் காண்பதற்கு அரிதாகும்
பொங்கும் அருட்கண்கள் தந்தேன் உனக்கு நான்
எங்கும் விளங்குமென் ஈச்வரத் தன்மையைப்பார்

ஸஞ்சயர் கூறுவது

(ஸ்லோகம்) 9.

பார்த்தனுக் கிவ்வாறு கூறிய பரந்தாமன்
நேர்த்தியாய் தன்தெய்வ வடிவத்தைக் காட்டினர்
சீர்திகழ் திருதராஷ்ட்ர ராஜனே ஹரியுடைய
பூர்த்தியாம்ஐஸ்வர்ய ரூபத்தைக் கண்டான் காண்டீபன்

(ஸ்லோகம்) 10, 11.

அநேக முகமும் கண்களும் கொண்டு அற்புத காக்ஷிகள்
[அநேகம் நிறைந்தது
அநேக திவ்யாபரணங் களணிந்து அநேக திவ்ய
[ஆயுதங்கள் ஏந்தியது
அநேக ஆடைகளும் மாலைகளும் அணிந்து அந்தமிகும்
[கந்த களபம் பூசியது
அநேக அதிசயம் நிறைந்தொளி வீசுவது அளவிலா
[தெங்கும் முகம் உள்ளது

(ஸ்லோகம்) 12, 13.

ஆயிரம் சூரியர்கள் உதிக்குமெனிலும் அது
மாயிருளாகு மந்த மஹத்தான வடிவின் முன்
வாயினற் கூறயியலாத பெரும் அற்புதத்தை
நேயமுடன் அர்ஜுனன் நெஞ்சாரக் கண்டான்

(ஸ்லோகம்) 14.

பெரும் வியப்படைந்துமெய்சிலிர்த்தவனய் தனஞ்ஜயன்
இருகரங்கள் கூப்பி சிரம் குனிந்து நமஸ்கரித்து
கருதரிய வடிவத்தைக் கண்டு மனம் கரைந்துருகி
அருஜுனன் அச்சமுடன் அடிபணிந்து கூறலுற்றன்

அர்ஜுனன் கூறுவது

(ஸ்லோகம்) 15.

தேவதேவா உந்தன் திவ்ய தேகத்தில் நான்
பூவமர் பிரமனையும் புரந்தரனு தியரையும்
மாவலி மிகுந்தவராம் மஹரிஷிகள் சித்தர்கள்
யாவரையும் உயிர்த் தொகுதி அனைத்தையும்
[காண்கின்றேன்

(ஸ்லோகம்) 16.

ஸிரஸின்மேல் சேஷனும் ஸர்ப்பத்தைப் பார்க்கின்றேன்
உரமிகும் தோள்களும் வயிறு வாய்கள் கண்கள்
பரமனே உலகிறைவா உலக வடிவான வனே
வரையிலா உன் னுருவின் அடிநடு முடிவறியேன்

(ஸ்லோகம்) 17.

சுடர்முடி தரித்து பெருங்கதையும் சக்கரமும் தாங்கி
படரும் ஒளிப் பிழம்பாகி பார்த்திடக் கூசுவதாய்
அடர்ந்தெழும் அனற்கொழுந்தாய் ஆயிரம் சூரியர்போல்
உடற் கொண்டெழுந்த உன் னுள் உலகெல்லாம்
[காண்கின்றேன்

(ஸ்லோகம்) 18.

அழிவற்ற பரமன்நீ அறிவதற் கரியவன் நீ
அழியும் உலகங்களுக்கு அப்பால் இருப்பவன் நீ
அழிவில்லா தர்மத்திற் காதார மானவன் நீ
அழிவில்லா ஆதி புருஷன்நீ அச்சுதா

(ஸ்லோகம்) 19.

ஆதிநடு அந்தமின்றி எல்லையில்லா சக்தியும் நீ
ஆதித்யன் அக்கினியும் சந்திரனும் உன்கண்கள்
ஜோதிவிடும் அக்கினியை வாயாக உடையவன் நீ
ஜோதியாம் உன்னொளியால் உலகெலாம் எரிப்பவனே

(ஸ்லோகம்) 20.

உன் ஒருவனாலே இம்மண்ணும் விண்ணும்
[நிறைந்துளது
உன்னொருவனாலெட்டு திசைகளும் மறைந்துளது
உன்ஒளி வீசும் உக்ர வடிவால் மூவுலகும்
உன்னரும் பயத்தினால் நடுங்கி அதிர்கின்றது

(ஸ்லோகம்) 21.

அபயம் புகும் இந்த தேவர்க் கூட்டங்களெல்லாம்
உபய கரம் கூப்பி உன்னைத் துதிக்கின்றார்
சுப மொழிகள்கூறி மஹரிஷிகள் சித்தரெல்லாம்
அபரிமிதமாய் உன்னை அன்புடன் துதிக்கின்றார்

(ஸ்லோகம்) 22.

ருத்ராதித்யர்களும் வசுக்களும் ஸாத்யர்களும்
மருத்துக்கள் அச்வினிகள் விச்வே தேவர்களுடன்
பித்ருக்கள் கந்தர்வர் யக்ஷ ராக்ஷஸ சித்தர்கள்
உத்க்ருஷ்டனும் உன்னை வியப்புடன் பார்க்கின்றார்

(ஸ்லோகம்) 23.

பல முகங்கள் கண்களுடன் தோள்கள் துடைத்
[தாள்களும்
பல வயிறுவாய்கள் பல தெற்றி பற்கள் நிறைந்து
பல வடிவாய்க் காணும் உன் பயங்கரப் பேருருவைப்
பல உலகங்கள் பார்த்துமிக பயந்துளது நானுமதே

(ஸ்லோகம்) 24.

வானளவு உயர்ந்தவனுய் ஒளிவீசும் வண்ணமுடன்
தானெரிக்கும் கனல் வீசும் கண்களுடன் வாய்த் திறந்து
நானடுங்கு மாறெதிர் நிற்கும் உன்னைக் கண்டெனக்கு
போனது அமைதி எல்லாம் தைரியம் இழந்தேன்
[கண்ணு

(ஸ்லோகம்) 25.

ஆழி இடங்கொண்ட அச்சுதா கேசவா
ஊழிக்கனற் போலும் வாய்களும் பற்களும்
சூழிருள் நீக்கும் சுடர்வீசும் கண்களும்
ஏழைக் கச்சம் மிகவளிக்கின்ற தருள் க்ருஷ்ணு

(ஸ்லோகம்) 26.

உலகாளும் மன்னவரும் உத்தமர் பீஷ்மர் த்ரோணர்
பலவான்கள் துர்யோதனு தியர்கள் கர்ணனுடன்
கலகம்செய் பகைவர்களும் நம்மவர்கள் வீரர்களும்
கலத்தில்வீழ் உணவாக கடுகி வருகிறுர் உன்முன்

(ஸ்லோகம்) 27.

கோரைப் பற்கள் நிறைந்த கோரமாம் வாய்களிடை
சாரி சாரியாய் வந்து புகுகின்ற இவரெல்லாம்
பாறை போற் பற்களிடைப் பஸ்மமாய் உடலெல்லாம்
கோரைப் பற்கள் இடைத்தலை சிக்கியே காண்கின்றுர்

(ஸ்லோகம்) 28, 29.

திரண்டோடும் நதிகளெல்லாம் கடலில் கலப்பதுபோல்
இருணீக்கும் சுடரில் விழும் விட்டிற் பூச்சிகள்
[போலும்
உருண்டோடும் உலகத்துயிர் களெல்லாம் உன் வாயில்
மருண் டோடிவந்து புகுந்து மடிகின்றதே

(ஸ்லோகம்) 31.

பயங்கர உருவுடைய பரமன் நீ யார் சொல்வாய்
நயமுடன் உனக்கு நான் நமஸ்கரிக்கின்றேன் தேவா
தயவுடன் நீஎனக் கருள் செய்ய வேண்டுகின்றேன்
மயக்கத்தினுல் உந்தன் மகிமை நான் உணரவில்லை

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 32.

உலகை அழிக்கும் காலன்நான் என்றறிவாய்
கலகங்களால் உலகை ஒடுக்க நான் இங்குற்றேன்
பலமிகும் உன்னுதவி இன்றியே இச்சேனை எல்லாம்
அலகைபோல் நானே அழித்திடுவேன் அனைவரையும்

(ஸ்லோகம்) 33.

நிமித்த மாத்திரமாய் நீயுள்ளாய் அர்ஜுன
குமித் திருக்கும் இவர்கள் கொல்லப் பட்டாரென்னுல்
சமித்துப்போல் சத்ருக்களை ஸம்ஹரித்து உன்புகழை
அமைத்துக்கொள் இடக்கைய்யால் அம்பெய்யும்வீரனே

(ஸ்லோகம்) 34.

ஆண்மையுடன் போர்புரிந்து அரசாக்ஷியைப் பெற்று
வீண்மயக்கம் ஒழிந்து வீரனய்த் திகழ்ந் திடுவாய்
காண் இவரெல்லாம் என்னுல் கவரப்பட்டார் உயிரை
நாணிழந்து நிற்காதே நலமடைய போர் புரிவாய்



விஸ்வரூப தர்சனம்

ஸஞ்சயர் கூறுவது

(ஸ்லோகம்) 35.

கேசவன் இவ்வாறு கூறியதைக் கேட்டதும்
மாசற்ற அர்ஜுனன் மனநடுக்கம் உற்றவனாய்
நேசனும் க்ருஷ்ணனை நமஸ்கரித்துக் கைகூப்பி
பேச வகையறியாது (நா)தழுதழுத்துக் கூறலுற்றான்

அர்ஜுனன் கூறுவது

(ஸ்லோகம்) 36.

உன்னுடைய புகழ்கேட்டு உலகெல்லாம் களிக்கிறது
பின்னும் பேரானந்தம் பெருகுகின்றதையனே
மன்னும் அரக்கரெல்லாம் மதிமயங்கி ஓடுகின்றார்
என்னுடைய இறைவனென்று ஏத்துகின்றார்
[சித்த ரெல்லாம்

(ஸ்லோகம்) 37.

அளவிறந்த பெரியோனே அமரர்களுக் கிறைவா
அளவிறந்த அண்டத்திற் கடைக்கலமான வனே
அளவற்ற ப்ரம்மனுக்கும் ஆதிகாரணனும் நீ
அளவற்ற மகிமையுள்ளாய் அனைத்திலும் நிறைந்
[துள்ளாய்

(ஸ்லோகம்) 38.

அழியாப் பரம்பொருள்நீ ஸத்அஸத்தும் கடந்தவன் நீ
பழைமையாம் புருஷன்நீ எல்லையற்ற உருவம் நீ
தொழும் ஆதிதெய்வம் நீ தோன்றும் உலகிற் குறை
[விடம் நீ
எழும் அறிவும் அறிபவனும் எல்லைநிலம் உலகம் நீ

(ஸ்லோகம்) 39.

வாயுயமன் அக்கினி வருணன்சசி ப்ரஜாபதி நீ
ஆயிரம் முறை உந்தன் அடிபணிந்தேன் ஈசா
சாயும் மரம்போ லடியில் சரணுகதி யானேன்
காயும் கதிரவன் போல் எங்கும் நிறைந்த உன்னை

(ஸ்லோகம்) 41

உன்மகிமை யறியாமல் என் கவனக் குறைவாலோ
அன்பில் உரிமையுடன் நண்பனென்று கருதியோ
இன்பமுடன் ஹே க்ருஷ்ணு யாதவா நேயா வென்று
பன்முறை யான் பகன்ற குற்றங்கள் க்ஷமித்தருள்வாய்

(ஸ்லோகம்; 42.

உண்பதில் உறங்குவதில் ஓடி விளையாடுவதில்
எண்மருடன் கூடியோ ஏகாந்த மாகவோ
விண்ணேர்க்கறியவனே வேடிக்கையாய் அவமதித்தேன்
தண்ணருள் காட்டி நீ தயவுடன் மன்னிப்பாய்

(ஸ்லோகம்) 43.

அசைவதும் அசைவற்றதாகும் இவ்வுலகிற்கு
இசைத்திடும் தந்தைநீ பூசிக்கும் பெரியோன் நீ
திசை எங்கிலும் உன்னில் உயர்ந்தவர் வேறில்லை
வசை கூறும் பகைவரையும் வாழ்விக்கும் வள்ளலே

(ஸ்லோகம்) 44.

பக்தியுடன் உடல் வணங்கிப் பணிகின்றேன் ஈசனே
புத்திரன் செய்பிழையைப்பொறுக்கும் தந்தைபோலும்
நத்திய நண்பன் பிழை பொறுக்கும் நேயன்போலும்
உத்தம மனைவி பிழை பொறுக்கும் கணவன் போலருள்
[வாய்

(ஸ்லோகம்) 45.

காணுததைக் கண்டு களிப்பெய்தி இருக்கின்றேன்
வீணுக என் மனம் வேதனை அடைந்தது
மூணும் உலகிற்கும் முதன்மையாம் தெய்வமே
தோணுய் பழய வடிவாகி என் கண் முன்னே

(ஸ்லோகம்) 46.

மணிமுடி தரித்து மயிலிற கணிந் தவனுய்
அணி பணி அணிந்து சக்கரம் கதை ஏந்தி
துணி மிகும் தோளாயிரங் கொண்டெங்கும் நிறைந்த [வனே
பணிகின்றேன் பலகாலும் பழய வடிவம் காட்டாய்

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 47.

அன்பிற் சிறந்த அர்ஜுனு உந்தனுக்கு
என்ப்ர பாவங்களும் எங்கும் நிறை வடிவமும்
முன்பெவரும் காணு என் விச்வ ரூபத்தையும்
என் பக்த னென்றுனக்குக் காட்டினேன் கருணையால்

(ஸ்லோகம்) 48.

வேதங்களாலும் வேள்வி முறையாலும்
மா தவங்கள் தானங்கள் வ்ருதங்கள் தன்னுலும்
ஏதமில்லா என் னுருவை எவருமே கண்டதில்லை
கோதில்லா குருவம்ச வீரனே நீ கண்டாய்

(ஸ்லோகம்) 49.

கோரமாம் என் உருவைக் கண்டுனக்கு பயம்வேண்டாம்
வீரனே களித்திடுவாய் விடுவாய் உன் அச்சத்தை
நாரணனும் நான் உலக நாயகன் என்றறிவாய் நீ
கோரும் என் வடிவத்தைக் காணுய் குரு நந்தனு

ஸஞ்சயர் கூறுவது

(ஸ்லோகம்) 50.

இவ்வாறு இயம்பியே ஹ்ருஷீகேசன் அர்ஜுனற்கு
அவ்வாறே தன்னழகு ரூபத்தைக் காட்டினார்
செவ்வாய் மலர்ந்தவனே இன்னுரையால் தேற்றினான்
மூவ்வாறு யோகம் உரைத்த பரந்தாமன்

அர்ஜுனன் கூறுவது

(ஸ்லோகம்) 51.

கண்ணுக்கினிய உன் கருணை வடிவைக்கண்டு
அண்ணலே ஆனந்தங் கொண்டகம் தெளிவுற்றேன்
எண்ணமும் உறுதியாய் என்செய லாற்றுவேன்
தண்ணருள் கண்ணனே தாமரைப் பாதனே

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 52, 53, 54,

பொன்முடி யணிந்த தேவர்கள் தவம் கிடந்தும்
என் வடிவை யாரும் உன்னைப்போல் கண்டதில்லை
பன்மறைகள தனாலும் பார்க்க அறிய நான்
அன்னிய சிந்தையில்லா பக்திக்கு அகப்படுவேன்

(ஸ்லோகம்) 55.

என்னைப் பரமாய்க்கொண்டு என்பணிகள் செய்பவனாய்
என் பக்தனாய் ஏதும் பற்றுதல் அற்றவனாய்
தன்னுயிர் போல் மன்னுயிரைக் காணும் தயாளுவாய்
வன் பகையற்றவனாய் வாழ்ளாய்நீ அர்ஜுனா

விச்வரூப யோகம் முடிந்தது.

பன்னிரண்டாம் அத்தியாயம்

பக்தி யோகம்

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) 1.

உன்னிடத்தில் நிலைபெற்ற மனத்தினராம் பக்தர்கள்
என்ன விதமாய் உன்னை பூசித்து வணங்குவரோ
அன்னியமாய்ப் புலனுக் கப்பால் இருக்கும் உன்னை
உன்னி உணர்ந்திடுவோர் ஞானிகளோ பக்தர்களோ

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 2.

நிலைபெற்ற மனத்தினராய் உறுதியுடன் கூடியவர்
குலையாத யோகத்திற் கூடுவோர் எனப்படுவார்
தலையான பக்தியால் என்னை உபாசிப் போர்
நிலையாக யோகத்தில் நிற்பவர்காண் காண்டீபா

(ஸ்லோகம்) 3.

எல்லாப் பொருளிடத்தும் ஏகபாவங் கொண்டு
பொல்லாப் புலன் ஐந்தும் புறம்போக வொட்டாமல்
சொல்லா லெடுத்துக் கூறமாட்டாதாய் காண
[மாட்டாததாய்
நில்லா மனதுக் கெட்டாததாய் எங்கும் நிறைந்ததாகி

(ஸ்லோகம்) 4.

மாறுதலற்றதாய் நிலைபெற்றதாய் அசைவற்றதாய்
கூறும் பொருளை எவர் குறித்து உணர்ந்து உபாசிக்
[கின்றார்களோ
வேறுபாடின்றி எல்லா உயிரும் இன்புற்றிருக்க
[நினைக்கும் ஞானிகள்
சேருவார் என்பதத்தில் சிறிதுமிதில் ஐயமில்லை
[செப்பினேன் கேள்

(ஸ்லோகம்) 7.

என்னையே நினைத்து நிலைபெற்ற மனத்தினரை
பின்னையோர் பிறப்பின்றி பெரும்பவக் கடல் கடத்தி
முன்னையோர் பெற்ற முக்திக் கரை சேர்த்து
அன்னவர்க்குக் காவலனாய் ஆவேன் நான் அர்ஜுனா

(ஸ்லோகம்) 9, 10.

சித்தத்தை என்னிடம் சேர்க்கும் திரமின்றேல்
நித்தியம் அப்யாஸ யோகத்தால் ஆச்ரயிப்பாய்
பக்தியுடன் அப்யாஸம் பயிலும் திரமின்றேல்
அத்தன் என்பணி என்று அனைத்தையும் செய்திடுவாய்

(ஸ்லோகம்) 11.

பணி செய்வதிலும் உனக்கு பற்றுதல் அற்றதெனில்
வணங்குவாய் என்னையே சரணாகதி யடைவாய்
கணக்கிலா கர்மபலனை அர்ப்பணம் செய்வாய்
இணக்கமாய் உனக்குறைத்தேன் எல்லா முறைகளையும்

(ஸ்லோகம்) 12.

கன்மத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்ததாம்
வன்மமில்லா ஞானத்தில் த்யானம் சிறந்ததாம்
உன்னிடும் த்யானத்தில் த்யாகம் சிறந்ததாம்
நன்மையாம் த்யாகத்தால் சாந்திபெறலாம் பார்த்தா

(ஸ்லோகம்) 13.

உயிர்களிடம் தயவுடன் உற்ற நற்ருேழனுய்
மயக்கிடும் நான் எனது என்ற ஹங்கரியாமல்
தயவும் கருணையும் பொறுமையும் உடையவனுய்
நயமுடன் இன்ப துன்பங்களை ஏற்பவனுய்

(ஸ்லோகம்) 14.

சந்தோஷ சித்தனுய் சாந்தமன முடையவனுய்
வந்தோடா திடசித்த வைராக்ய முடையவனுய்
எந்தோழனுய் அனைத்தும் எனக்கர்ப்பணம் செய்து
தந்தோ மென்னும் பக்தன் எனக்கன்பனுகுமே

(ஸ்லோகம்) 15.

எவனுல் உலகம் துன்புறுவ தில்லையோ
எவன் உலகிடமிருந்து துன்புறுவதில்லையோ
எவன் மகிழ்ச்சி சினம் அச்சம் பயம் இல்லா திருப்
[பவனே
எவன் பற்று விட்டவனே அவனே எனக்கன்பன்

(ஸ்லோகம்) 16.

எதையும் வேண்டாதவனுய்ப் பரிசுத்தனுய்த்
[திறமையுடன்
சிதையும் மனத்துயரொழித்து சேராமலெதனிலும்.
கதை எனக் காமியக்கர் மங்கள் துறந்தவனுய்
இதயத்தை எனக்களித்தோன் என் பக்தனும் பார்த்தா

(ஸ்லோகப்) 17.

எவன் மகிழ்ச்சி துயர் வெறுப்பு ஆசைகள் அற்றவனே
எவன் எல்லா நல்வினைகள் தீவினைகள் விட்டவனே
எவன் மானுவ மானத்தில் சத்ரு மித்ரரில் சமனே
எவன் குளிர் வெப்பம் சுகதுக்கப் பற்றற்றவனே

(ஸ்லோகம்) 19.

இன்பமும் துன்பமும் ஏற்றென்றும் மௌனியாய்
அன்புடன் எதைக்கொண்டும் ஆனந்த மடைபவனுய்
துன்பத்திருப்பிட மற்று திடசித்தனுய் உள்ள
என் பக்தன் எவனே அவனே எனக்கன்பன்

(ஸ்லோகம்) 20.

தர்மம் தவருத அழியாத இவ்வழியை
கர்மகட்டறுக்க எவர் கைகொண்டு நடப்பாரோ
வர்ம மின்றி என்னையே வழிபடும் பக்தருக்கு
நிர்மல வாழ்வளித்து நித்யானந்தம் தருவேன்

பக்தி யோகம் முடிந்தது.

பதிமூன்ருவது அத்யாயம்

(க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம்)

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 1, 2.

இந்த உடல் க்ஷேத்ரமென்று கூறப்படுவதாம்
இந்த உடலுறையும் உணர்வே க்ஷேத்ரஜ்ஞன்
[என்றுரைப்பார்
வந்த பல தேகத்தில் வாழ்ந்த ஜீவாத்மா நான்
இந்த விதம் அறிவதே ஞானமென்றென் கொள்கை

(ஸ்லோகம்) 3.

க்ஷேத்திரம் எதுவென்றும் அதன் வேறுபாடெ
[தென்றும்
சாத்திரங்கள் கூறுவதை சாற்றிடுவேன் நீகேளாய்
பாத்திருக்கும் வேதங்கள் பாடிப் பணிந்ததுவும்
ஆத்திகராம் ரிஷிகளெல்லாம் அறிந்துரைத்த
[திதுவேயாம்

(ஸ்லோகம்) 5, 6.

பஞ்ச பூதங்களும் மூலப்ர க்ருதியினுல்
மிஞ்சும் அஹங்காரம் புத்தியுடன் புலன்பத்தும்
வஞ்ச இந்த்ரிய விஷய விருப்பு வெறுப்பின் துன்பம்
சஞ்சல ஜீவசக்தி க்ஷேத்திரமென் றறிவாயே

(ஸ்லோகம்) 7, 8.

தற்பெருமை டம்பமின்றி பொறுமையுடன் ஜீவதயை
சொற் தவரு நேர்மை தூய்மை விடாமுயற்சி
[தன்னடக்கம்
அர்ப்பணமாய் குருசேவை அஹங்கார மின்மையும்
கற்பிக்கும் விஷய சுகவெறுப்பும் வைராக்யமும்

(ஸ்லோகம்) 9, 10.

பிறப்பு இறப்பு மூப்பு பிணிபெருந் தீமை சிந்தித்தல்
அறமழிக்கும் வீட்டாசை அபிமானம் மோகம்
புறக்கணித்து சமசித்தனும் பக்தி உறுதியாய்த்
துறவி போல் கூட்டத்தில் சேராது தனித்திருந்து

(ஸ்லோகம்) 11.

ஆத்ம ஞானத்தில் அசையாத சித்தமுடன்
சாத்திர ஞானத்தினுல் சத்தியத்தைக் கண்டுணர்ந்து
காத்திருந்து காண்பதே ஞானமென் றோதுவது
மாற்றிவைக்கு நேரெல்லாம் அஜ்ஞான மறிவாயே

(ஸ்லோகம்) 12.

எதையறிந்து சாகாத தன்மையை அடைவானே
எது அறியத் தக்கதோ அதைஉனக்குக் கூறுவேன்
எது ஆதிஇல்லா துயர்ந்து என்றும் உள்ளதோ
அது ப்ரஹ்மம் சத் அஸத்தென்று சொல்வதாம்

(ஸ்லோகம்) 14.

புலனைந்தின் செயல்களால் புலப்படுவதாயினும்
புலனைந்துக் கப்பாற்பட்ட தாய் பற்றற்றும்
உலகனைத்தும் தாங்கியும் தான் தனித்திருந்தும்
மலரஹிதமாயும் குண தோஷங்கள் ஏற்பதாய்

(ஸ்லோகம்) 15.

உள்ளும் வெளியும் அசைவற்றும் சலனமாய்
விள்ளரிய சூக்ஷ்மமாய் விளக்க அரிதானதாய்
கொள்ளறிய தூரத்தில் உள்ளதாய் சமீபமுமாய்
தள்ள அரிதாயினும் தள்ளிநிற்கும் தோற்றமுடன்

(ஸ்லோகம்) 16, 17.

தாங்குவதும் வாங்குவதும் தருவதும் தானுகி
ஓங்கும் பெருஞ்ஜோதிக் கெல்லாம் உயர் ஜோதியாய்
தேங்கும் அஜ்ஞான இருளுக்கு அப்பாற்பட்டு
பாங்காம் அறிவால் பார்க்கும் பொருள் ஆத்மா

(ஸ்லோகம்) 19, 20, 21,

ப்ரக்ருதியும் புருஷனும் பழமையாம் தத்துவங்கள்
ச்ரத்தையுடன் குணங்களைப் படைப்பது ப்ரக்ருதியாம்
வ்ருத்தியில் அனுபவிக்கும் போக்தா புருஷனும்
ப்ரவ்ருத்தியில் நலம் தீமைபிறப் பிறப்பளிப்பதாம்

(ஸ்லோகம்) 22.

பார்ப்பவர்க்கு மேல்நின்று பார்ப்பவனுகவும்
காப்பவன் நினைப்பவன் அனுபவிப் போனுயும்
சேர்த்தருள் தந்திடும் இறைவனுய் உள்ளவன்
பார்த்திடு இவ்வுடலுக்குள் வேராம் பரமாத்மாவாம்

(ஸ்லோகம்) 23.

இவ்வாறு ப்ரக்ருதியையும் புருஷனையும் அறிந்தவர்கள்
ஒவ்வாத நெறியினில் வாழினும் இனிபிறவார்
செவ்வையாம் த்யானத்தால் சாங்கிய யோகத்தால்
அவ்வாறு அறியாதவரும்அருள்மொழியால் அறிகின்ருர்

(ஸ்லோகம்) 27, 28.

எல்லாப் பொருள்களிலும் இடம்பெற்று உள்ள என்னை
சொல்லால் அறிவிக்க முடியாது எவர்க்குமே
நல்லான் எவன் எங்கும் ஈசன் என்னைக் காண்பானோ
வல்லான் அவனே என்னைக் கண்டவன் காண்டீபா

(ஸ்லோகம்) 29.

இயற்கையே எல்லா செயலுக்கும் மூலமாம்
செயலற்றதாய் எவன் ஆத்மாவைக் காண்பானோ
பயனற்று பூதங்கள் ஆத்மாவில் ஒடுங்குவதும்
நியதியால் உற்பத்தி அறிந்தவன் ப்ரம்மனும்

(ஸ்லோகம்) 30, 31.

ஆதியற்று அழிவற்று அசையும் குணமற்று
ஜோதியாய் உள்ளிருக்கும் பரமாத்மா இவ்வுடலில்
ஏதும்தான் செய்வதில்லை எப்பற்றும் கொள்வதில்லை
மோதிவரும் காற்றுபோல் களங்க மடைவதில்லை

(ஸ்லோகம்) 32, 33.

ஒரு சூரியன் உலகெலாம் ஒளிவீசி நிற்பது போல்
கருணையுடன் உருவனைத்தும் காட்டுவோன் பரமாத்மா
உருவங்கள் க்ஷேத்திரமாய் உள்ளிருப்போன்
[க்ஷேத்திரஜ்ஞு
இருவகையும் அறிந்தவர்கள் எய்துவார் ப்ரம்மநிலை

க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞுவிபாக யோகம் முடிவடைந்தது.

பதினன்காம் அத்தியாயம்

(குணத்ரய விபாக யோகம்)

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 1.

இவ்வுடலின் உறவாம் உயிர்நீத்த பின் ஞானி
எவ்வா றெனையறிந்து எய்துவரோ சித்தியை
செவ்விய ஞானங்களுள் சிறந்து பரம்பொருளைச்
[காட்டுவதாம்
அவ்வறிய ஞானத்தை அர்ஜுன உனக்குரைப்பேன்

(ஸ்லோகம்) 2.

ஞானமிதை அனுஷ்டித்து என்பதவி பெற்றவர்கள்
வானவர் அறியா நிலையில் வரத்துப் போக்கற்ற வராய்
தான் ச்ருஷ்டியில் பிறந்து ப்ரளயத்தில் அழியாமல்
ஈனமில்லா வாழ்வுபெற்று என்றும் என்னுடனிருப்பார்

(ஸ்லோகம்) 5, 6.

சத்துவம் ரஜஸ்தமஸ் ஸென்னும் முக்குணத்தால்
இத்தரணியில் உயிரை உடலுக்குள் கட்டுவதாம்
சத்துவத்தால் ஞானத்தில் பற்றுதலும் சாந்தியும்
உத்தம குணங்களும் உண்டாகும் ஜீவனுக்கு

(ஸ்லோகம்) 7, 8.

ஆசை வடிவாம் ரஜஸ் ஆசைகளைத் தூண்டியே
பாசக் கயிற்றினல் பந்திக்கும் ஜீவனை
மோசமாம் தமோகுணம் மோஹத்தை உண்டாக்கி
நாசமாக்கும் அக்ஞானத்தால் ஜீவனை

(ஸ்லோகம்) 10.

சத்துவம் மேலோங்கில் ரஜஸ்தமஸ் அடங்கிடுமே
மெத்த ரஜோ குணம் மிகுந்தால் மற்ற இரண்டும்
[அடங்கும்
மத்தமாம் தமோகுணம் நத்தவிட மற்றதனை
அத்தன் என் அருளால் இத்தனையும் அடங்குமே

(ஸ்லோகம்) 11, 12, 13.

ஞானத்தில் இச்சைமிகும் சத்துவம் ஓங்கி நின்றால்
ஆனரஜோ குணம் மிகுந்தால் அஹங்காரத் துடிப்
[புண்டாம்
மானமில்லா வாழ்வு மதிமயக்கம் அவிவேகம்
ஊனமிகும் தமோகுணத்தில் உண்டாகும் ஜீவனுக்கு

(ஸ்லோகம்) 14, 15, 16.

சத்துவ குணமோங்கி சாகின்ற ஞானிக்கு
முத்தி உடன் உண்டாகும் மோக்ஷ மடைவார்கள்
சித்தத்தில் ராஜஸம் ஓங்குங்கால் இறந்தவர்கள்
இத்தரணி தன்னில் பிறந்துழல்வார் மறுபடியும்
தமோ குணத்தில் ஆழ்ந்து தம்முயிரை விடுவோர்கள்
விமோசன மின்றி விலங்குகளாய் பிறந்துழல்வார்
தமோ குணத்தின் பலன் அக்ஞானம் துன்பம் ரஜோ
[குணமாம்
அமோகமாய் ஆத்ம ஞான மளிக்கும் சத்வம்

(ஸ்லோகம்) 17, 18, 19.

ஞான மார்க்கம் சத்வம் மேல் நோக்கிச் செல்வதாம்
நானென்று அஹங்கரிக்கும் ராஜஸம் நடுவழியாம்
தானழிய வழிகோலும் தாமதம் கீழ்வழியாம்
ஆன முக்குணத்துக் கப்பால் அறிகின்றான் ஞானி
[என்னை

அர்ஜுனன் கூறுவது

(ஸ்லோகம்) 21.

எதனுல் இம்முக் குணத்தைக் கடந்து செல்கின்றுன்
[ஞானி
அதனை அறிவிப்பாய் அவன் செய்கை எவ்விதம்
உதற முடியா இம்முக் குணத்தைக் கடப்பதற்கு
எதன் துணை ஞானிக்கு இயம்புவாய் ஹ்ருஷீ கேசா

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 22.

முக்குணத்தால் மேலெழும்பும் அக்குணத்தின்
[தன்மைகளை
தக்கபடி தானடக்கி தானதிற் கலவாமல்
எக்கணமும் இதயத்தில் என்னை மறவா ஞானி
சிக்கிடான் விருப்பு வெறுப் பென்னும் இருவினைக்கும்

(ஸ்லோகம்) 23, 24, 25.

இருவினையில் சாராது முக்குணத்தில் மயங்காது
வரும் இன்ப துன்பங்களில் வருந்தி மகிழாது
விருப்பு வெறுப்பின்றி மனம் ஒருமையுடயவனுய்
பெரும் புகழும் இகழ்ச்சியும் பேதமின்றி ஏற்பவனுய்
மானுவ மானத்தால் மனது சஞ்சல மின்றி
நானு கருமங்கள் நாட்டங்கள் விட்டவனுய்
தானுய்ப் பகை என்றும் நட்பென்றும் எண்ணுமல்
ஊனுட்டம் என்றுணர்வோன் உத்தமன் குணுதீதன்

(ஸ்லோகம்) 26, 27.

பக்தி யோகத்தால் என்னை நித்தியம் நினைப்பவன்
முக்திக் குரியவனுய் முக்குணங்கள் கடந்து செல்வான்
சக்திக் கெல்லாம் என்சாண் இருப்பிட மன்றே
பக்தியினுல் பரகதி யடையலாம் பாண்டவனே

குணத்ரய விபாக யோகம் முடிந்தது.

பதினைந்தாவது அத்யாயம்

(புருஷோத்தம யோகம்)

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 1.

வேர்மேல் படர்வதும் கீழேகிளை பரவுவதாய்
பூர்வத்தில் முடிவுற்ற சம்ஸார வ்ருக்ஷத்தை
பார்த்து அம்மரத்தில் வேதங்கள் இலைகளென
தேர்ந்தறியும் ஞானியே வேதத்தை அறிந்தவனும்

(ஸ்லோகம்) 2.

அம்மரத்தின் கிளைகளெல்லாம் முக்குணத்தாற்
[செழித்து
வெம்மையாம் விஷய வாசனை என்னும் தளிர்விட்டு
செம்மை யாய்க் கீழ்மேலும் ஜகந்தனில் பரவியே
இம்மையில் கருமத்தின் பலன் அளிப்ப தென்றறிவாய்

(ஸ்லோகம்) 3.

இதனுடைய உருவத்தை அறியக் கூடியதில்லை
அதற்காதி முடிவில்லை இருப்பென்பது மில்லை
சதமாக வேர்கொண்ட அவ்வரச மரத்தினை
எதிலும் பற்றின்மை யெனும் இரும்பு கோடரியாற்
[பிளந்து

(ஸ்லோகம்) 4.

எவனிட மிருந்து இவ்வுல கெல்லாம் தோன்றியதோ
அவனையே சரணடைகின்றே னென்று உறுதியாய்த்
தவறு தவ்வழி செல்வோர் தாம்திரும்பி வருவதில்லை
உவந்துனக் குரைத்தேன் நான் உற்றுணர்ந்தறி
[பார்த்தா

(ஸ்லோகம்) 5.

செருக்கும் மோஹமும் ஆசைபற்றுதல் அற்று
இருவினைகள் இன்பதுன்பங்களும் அற்று
பெருதற்கரும் ஆத்ம நிஷ்டையில் நிற்போர்கள்
இருளாம் அஜ்ஞான மழிந்தருள் ஒளி காண்பார்

(ஸ்லோகம்) 6.

எங்கு சென்றவர் இனிப்பிறப்ப தில்லையோ
தங்குமிடம் அதுவே தற்பரமென்றறி வாயே
அங்கு சூரிய சந்த்ரன் அக்கினியும் ஒளிவீசா
எங்கும் என் பேரொளியே நிறைந்த தென்பரம பதம்

(ஸ்லோகம்) 7, 8.

அனாதியாம் என்னம்சம் ஆத்மாவாகத் தோன்றி
மனாதியாம் ஆறு புலன்களைக் கவர்கிறது
தனாதி சக்தியாய் பிறப்பிறப்பு அடையுங்கால்
பி(ன்)னால் இழுத்தேகும் காற்றுபோல் வாசனையை

(ஸ்லோகம்) 9, 10, 11.

ஐம்புலன்களால் அனுபவிக்கின்றான் ஆத்மா
மெய்விட்டுச் சென்றாலும் இருந்தாலும் கன்மத்தை
செய்யாதவ னென்றே காண்பார்கள் ஞானியர்கள்
பொய் சூழ்ந்த மனத்தினர்கள் என்னாளும் காண்பதில்லை

(ஸ்லோகம்) 12, 13.

உலகெங்கும் வ்யாபிக்கும் சந்த்ர சூரிய ரொளியும்
பல பணிகளுக் குதவிடும் அக்கினியின் பேரொளியும்
நலமுடன் நானளித்த ஒளிஎன்று அறிவாயே
பல பொருளாய் நின்று நான் பாருலகைத் தாங்கு
[கின்றேன்

(ஸ்லோகம்) 14, 15.

அக்கினியாய் நரனே அனைத்துடலுள் இருந்துமே
முக்கியமாய் ப்ராண னுடன் அபான னுடன் கூடியே
தக்கபடி உணவைநான் தான்செரிக்கச் செய்கின்றேன்
எக்காரியமும் என்னால் இயற்றப்படும் உலகில்

எல்லா இதயத்துள் இருப்பவன் நான் பார்த்தா
பல்வேறு குணங்களும் பழமறைகள் பலவாகி
சொல்லால் அறிவிப்போன் கேட்பவன் அறிந்தவன்
வல்லானும் இவைஎல்லாம் வகுத்தவன் நான் பார்த்தா

(ஸ்லோகம்) 16, 17.

எவன் இவ்வுலகெல்லாம் ஊடுருவி நிற்பவனே
எவன் இவ்வுயிரனைத்தும் படைத்துக் காத்தழிப்பவனே
எவன் எல்லா வற்றுக்கும் ஆதியாம் முதல்வனே
அவனே புருஷோத்தம னென்றறிவாய் நீ அர்ஜுனு

(ஸ்லோகம்) 19, 20.

எவன் என்னைப் புருஷோத்தமனென் றறிவானே
எவன் என்னை அனைத்துமாய் எண்ணிப் பணிவானே
அவனே சிறந்தவனென் றறிவித்தேன் உந்தனுக்கு
அவன் என்னைக் கண்டு அடைவதற் குரியவனும்

புருஷோத்தமப்ராப்த்தி யோகம் முடிந்தது.

பதினாறும் அத்யாயம்

(தைவாஸுர ஸம்பத் விபாக யோகம்)

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 1, 2, 3.

பயமின்மை மனத்தூய்மை கர்மம் ஞானத்தில் நிலைத்தல்
நயமுடன் புலன் அடக்கம் தானம் தவம் வேள்வி
மயக்கறச் சாத்திரங்கள் ஓதுதல் மனநேர்மை
தயவாம் அஹிம்சை உண்மை சினமின்மைத் துறவு
[அமைதி

பிறர்பொருள் நயவாமை நாணம் மன உறுதி
சிறந்தவீரம் தளராமை பிறர்குற்றம்பொறுத்தல் சுத்தம்
கறவாமை செருக்கின்மை என்னும் குணங்களெல்லாம்
அறந்தவருத் தெய்வ சம்பத்தின் இயல்பாகும்

(ஸ்லோகம்) 4.

டம்பம் தற்புகழ்ச்சி கோபம் கொடுஞ்சொற்கள்
தம் புகழையே கூறும் மடமைமதம் அஞ்ஞானம்
இம்மானிலத்தில் அசுர குணத்துடன் பிறந்தோர்
தம்மியல்பாகும் தனஞ்சயா அறிந்துக்கொள்

(ஸ்லோகம்) 6.

இருவகை உயிர் பிறப்பு இவ்வுலகில் உள்ளது
திருமிகும் தெய்வப் பிறவியும் அசுர ஜன்மமும்
பெருந்தெய்வ குணமெல்லாம் பேசப்பட்டதினிமேல்
வரும் அசுரத்தன்மை எல்லாம் அறிவிப்பேன்
[உந்தனுக்கு

(ஸ்லோகம்) 7, 8.

செய்யும் நல்வினையறியார் விடும்தீவினையறியார்
மெய்யிற் சுத்தமில்லை மேன்மையாம் நடத்தை இல்லை
உய்ய ஓர் உண்மை இல்லை உயர்குணங்களேதுமில்லை
தெய்வமில்லை என்பார்கள் தேகசுகமே விழைவார்

(ஸ்லோகம்) 9·

மதியற்ற இம்மனிதர் மாயையிற் சிக்குண்டு
சதமான ஆத்ம இன்பத்தை இயந்தவராய்
'மிதமின்றி கொடுந்தொழில்கள் புரிந்துலகின்
[சத்ருக்களாய்
அதன் நாசத்திற்காகவே பிறந்தழிகின்றூர்கள்

(ஸ்லோகம்) 10, 11.

அடங்கா காமத்தில் ஆசையினுல் அஹங்கரித்து
தொடங்குவார் பலகெட்ட செயல்களும் மதியின்றி
சடங்குகள் பல செய்வார் பக்தி சுத்தங்களின்றி
மடையரிவர் காமத்தில் மூழ்கி மரணமடைவார்கள்

(ஸ்லோகம்) 12.

ஆயிரங்கணக்கான ஆசைக் கயிற்றில் சிக்கி
மாயிருள் நரகமாம் காமத்துக் கடிமையாய்
போயிவர் தேடுவார் பொற்குவியல் நீதியின்றி
பேயினும் கொடியராய்க் கோபித்துக் கொடுமை
[செய்வார்

(ஸ்லோகம்) 13, 14.

இப்பொருளெல்லாம் என்திறத்தால் சேர்த்தது
செப்பரும்புகழ் என்னைச் சேர்ந்துயர் வடைந்தது
அப்படிஎன் பகைவன் அழிந்தான் என் பலத்தினுல்
ஒப்பில்லை எனக்காரும் என்று அஹங்கரித்து

(ஸ்லோகம்) 15.

உயர்குலத்தில் பிறந்தவன்நான் உற்றசெல்வம்
[படைத்தவன் நான்
அயர்வின்றி பொருள்தேடி ஆசை எல்லாம் அனுபவிப்
[பேன்
செயற்கரிய தானம் தவம் வேள்வி செய்து
[புகழுடைவேன்
பயமடையச் செய்தென்னைப் பணியவைப்பேன்
[அனைவரையும்

(ஸ்லோகம்) 16.

என்று பல ஆசைகளால் உள்ளம் தெளிவற்று
நன்று தீதறியாமல் நாளைக் கடத்தியே
அன்று வரும் காலனிடம் அகப்பட்டு நரகத்தில்
சென்று வீழ்ந்தறிவார்கள் செருக்குற்ற பேர்க
[ளெல்லாம்

(ஸ்லோகம்) 17.

தன்னைத் தானே புகழ்ந்து தக்கவரை யவமதித்து
என்னை மதியாமல் பொன்னும் புகழும் தேடி
பின்னைப் பிறப்படைய பேருக்கு பூஜை செய்து
முன்னைவினைக் கிணங்க மோகத்தில் உழல்வார்கள்

(ஸ்லோகம்) 18, 19.

தேகத்தில் வாழ்கின்ற தேகிஎன்னை யறியாமல்
ஏக ஆடம்பரத்தோடு என்னை பூசிப்பார் வெளியில்
மோகத்தினுல் மயங்கி முறையற்ற வழிசென்று
சாகவும் பிறக்கவும் சலிப்பின்றி வருகின்ருர்

(ஸ்லோகம்) 20.

ஆசுரஜன் மங்கள் அடிக்கடி பிறந்திறந்தும்
மாசுகள் நீங்காமல் மாயையினுல் மறுபடியும்
ஏசும் இழிபிறவி எண்ணற் றெடுத் துழன்று
நாச மடைகின்ருர் நரகத்தில் கிடந்தென்றும்

(ஸ்லோகம்) 21, 22.

நாசத்திற் கிடமான நரகவாயில்கள் மூன்று
ஆசைக் கோபம் லோபம் என்றிவை மூன்றுமாம்
மாசற்ற ஞானிக்கு இம்மூன்றும் பற்ருது
நேசத்துடன் என்னை நாடி நற்கதியடைவார்

(ஸ்லோகம்) 23.

அறநெறி விட்டெவன் ஆசைக்குட் படுவானே
துறந்து ஞானத்தை இழிதொழில் செய்மூடனவன்
பிறந் திறந்து பெருந்துன்ப நரகத்தையே அடைவான்
செறிவற்ற இன்பநிலை சென்றடைவ தில்லையவன்

(ஸ்லோகம்) 24.

செய்யத் தக்கவைஎது தகாததெது வென்று
மெய்யறிவாம் சாத்திர ஞானத்தால் நிச்சயித்து
ஐய மின்றி அனுசரித்து ஆத்ம ஞானம் பெறுவாய்
பொய்யாம் அஞ்ஞானத்தைப் போக்கிஉன் பணி
[செய்வாய்

தைவாஸுர ஸம்பத் விபாக யோகம் முடிவடைந்தது,

பதினேழாம் அத்யாயம்

(ச்ரத்தாத்ரய விபாக யோகம்)

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) 1.

சாத்திர நெறியின்றி ச்ரத்தையுடன் பூசிப்போர்
ஏத்திடும் அவர்நிலை முக்குணத்தில் எவ்வகையாம்
ஆத்திரக்காரன் நான் அறியாமல் கேட்கின்றேன்
காத்திடும் கண்ணனே கருணையுடன் நீ உரைப்பாய்

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 2, 3.

இயற்கையால் உண்டாகும் இச்சைகள் மூன்று விதம்
செயற்கையாம் சாத்திரச் சம்மத மற்றது
முயற்சியே வடிவான ஜீவன் இச்சை எதுவோ
அயற்சியின்றியவன் அதைத் தொடர்ந்து செல்கின்றான்

(ஸ்லோகம்) 4.

சத்துவகுண முடைய பக்தர்கள் தேவரையும்
மத்திமராம் ராஜஸர்கள் யக்ஷராக்ஷஸர்களையும்
மெத்த தாமதம் நிறைந்தோர் பூதப்ரேதங்களையும்
பக்தியுடன் பூசித்து பலனடைவார் அவ்வகையே

(ஸ்லோகம்) 5, 6.

உடலையும் புலன்களையும் உள்ளிருக்கும் என்னையும்
மடமையால் வருத்தியே மறைகூறத் தவம் செய்வோர்
இடம்பம் அஹங்காரம் காமம் நிறைந்தவராய்
படரும் இருள்வழி நடக்கும் அஸுர ஜென்ம
[மென்றறிவாய்

(ஸ்லோகம்) 7, 8.

அவரவர் விரும்பும் ஆசாரம் மூவகையாம்
தவருமல் அவ்வாறே தானம்தவம் வேள்விகளும்
கவராமல் ஆரோக்யம் சுகம்தந்து காப்பதும்
எவராலும் ஏற்கத்தகும் உணவு சத்துவர்க்காம்

(ஸ்லோகம்) 9.

உப்பு புளிப்பு கசப்பு கடுஞ்சூடுவர்ப்பு காரம் எரிப்பு
எப்போதும் துக்கத்துக் கேதுவாம் பிணியுண்டாம்
தப்பேதும் அறியாத ராஜஸர்கள் உணவாகும்
அப்போதைக் காசையாய் உண்டவதி யுறுவார்கள்

(ஸ்லோகம்) 10.

சமைத்தாறிப் போனதும் சத்திழந்தும் புளித்தும்
அமைத்திடும் பூஜைக் குதவாது உண்டு மிகுந்ததும்
தமக்கென இச்சையுடன் தாமதர்கள் உண்பார்கள்
எமை எண்ணி உண்போர்க்கு நஞ்சும் அமுதமாம்

(ஸ்லோகம்) 11.

நங்கடமை என்று நடுநிலை நின்றவராய்
தங்கள் பணிஎல்லாம் தர்மம் தவருமல்
எங்கெவர் செய்தாலும் ஏற்பேன்நான் இன்பமுடன்
அங்கவர்கள் சாத்வீகர் என்றறிவாய் அர்ஜுன

(ஸ்லோகம்) 12.

பலனை இச்சித்தோ பலர்புகழ வேண்டியோ
நலமின்றி செய்யும் பூஜைகள் ராஜஸமாம்
கலங்கும் மனத்துடன் கருத்தில்லாமற் செய்வார்
உலகில் தாமதர் என்றும் உய்யும் வழிதேடார்

(ஸ்லோகம்) 13.

தேவர் அந்தணர் ஆசான் அறிவுடையோரிடம் பணிவும்
பாவத்தில் பயம்நேர்மை பரிசுத்தம் ப்ரம்மசர்யம்
எவர்க்கும் ஹிம்ஸை அளிக்காமை இவை எல்லாம்
மூவகையில் தேகத்தால் செய்யும் தவமென்பார்

(ஸ்லோகம்) 14.

கடுமை இல்லா துண்மை அன்புநலன் நிறைந்தவராய்
சுடும் சொற்களின்றி தமக்குரிய வேதம் படித்தல்
வடுவின்றி பேசுதல் வாக்கால் செய்தவமென்று
நடுநிலை நின்றவரை நவில்வார்கள் பெரியோர்கள்

(ஸ்லோகம்) 15.

மனத்தெளிவு மௌனம் அன்புடைமை தன்னடக்கம்
நினைப்பில் பரிசுத்தம் நேர்மையும் மனத்தவமாம்
தனது திடசித்தத்தால் தவம்மூன்று வகையாகும்
உனக்குரைத்தேன் அர்ஜுனா உணர்இது சாத்வீகம்

(ஸ்லோகம்) 16.

உபசாரம் வெகுமானம் பெறவேண்டி டம்பமாய்
சபை மெச்சும்படி செய்யும் பூஜை ராஜஸமாகும்
தபமென்று தன்னை வதைத்தும் பிறர் அழிய
விபரீதமாய்ச் செய்யும் தவம் தாமதமாகும்

(ஸ்லோகம்) 20.

காலதேசம் அறிந்து ஏற்கத் தக்கவர்க் குதவல்
சாலநங் கடனென்று சற்றும் பலன் கோராது
சீலத்துடன் தரும் தானமே சத்துவமாம்
ஞாலத்தில் சிறந்த வீரனே மற்றது கேள்

(ஸ்லோகம்) 21.

பலனை எதிர்பார்த்தும் பிரதிபலன் கோரியும்
கலங்கும் மனத்துடன் கஷ்டத்துடன் தரும்
நலமில்லாக் கொடை எதுவே ராஜஸமாம்
புலனடக்கம் இல்லாதார் புரியும் தானம் வீணே

(ஸ்லோகம்) 22.

தகுதியற்ற துஷ்டருக்கும் தகுதியற்ற இடங்களிலும்
மிகுதியும் பிறரை அவமதியாய் எண்ணியும்
வெகுவாய் வசைபாடி அளிக்கின்ற தானமெல்லாம்
நகும்படி நரகத்தில் தள்ளும் தாமத தானம்

(ஸ்லோகம்) 23.

ஓம் தத்ஸத் என்று மூவகைக் குறிப்பினுல்
ஆமிந்த ப்ரம்மத்தை அறிவிக்கின்றது வேதம்
நாமிந்த வகையாக தேம் வேள்வி விற்பனர்கள்
பூமியில் படைத்தோம் ஆதியில் ஓங்காரத்தால்

(ஸ்லோகம்) 24.

தாமியற்றும் தானம்தவம் வேள்வி எல்லாம்வேதத்தின்
ஓமென்ற ஒலியினை உச்சரித்துச் செய்தார்கள்
ஓம் தத்ஸத்தென்றுரைத்து உலகாசை கொள்ளாது
தாமியற்றும் தவமெல்லாம் தற்பரத்தைநாடிச்செய்தார்

(ஸ்லோகம்) 26, 27.

உள்ளது நல்லதென் றுரைக்கும் சத்தென்ற சொல்
[லொலியே
கள்ளமில்லா நற்கருமம் சத்தென் றுரைப்பதாம்
விள்ளறிய தானம்தவம் வேள்வி எல்லாம் சத்கருமம
மெள்ள உணர்ந்தறிவாய் மேலுமிந்த தத்துவத்தை

(ஸ்லோகம்) 28.

ஸ்ரத்தையின்றிசெய்த தானம்தவம் ஹோமமென்னும்
க்ருத்தியங்களெல்லாம் அஸத்தென்று அறிவாயே
வ்யர்த்தமாம் இவையெல்லாம் அங்கும் இங்கும்
[பயனில்லை
ப்ருத்யனென்று உனக்குரைத்தேன் ப்ரம்மத்தின்
[தத்துவத்தை

ச்ரத்தாத்ரய விபாக யோகம் முடிவடைந்தது.

பதினெட்டாவது அத்யாயம்

(மோக்ஷசன்யாச யோகம்)

அர்ஜுனன் கேட்பது

(ஸ்லோகம்) 1.

கேசிஎன்னும் அசுரனை மாய்த்தவனே ஸ்ரீக்ருஷ்ணா
பூசைக்குரியவனே சன்யாச மென்பதென்ன
மாசில்லா தியாகத்தின் மாண்பென்ன வென்று நீ
நேசன் எனக்குரைப்பாய் நின்னருள் வாக்கினால்

ஸ்ரீ பகவான் கூறுவது

(ஸ்லோகம்) 2.

கர்மம் செய்யாமையே துறவென்று நினைக்கின்றார்
மர்மம் அறிந்த மஹரிஷிகள் மொழிவது கேள்
நிர்மல மனத்துடன் நித்ய கர்மங்களெல்லாம்
தர்மமென்று செய்வதே தியாகத்தின் பண்பென்றார்

(ஸ்லோகம்) 3, 4.

தானம் தவம் வேள்வி எல்லாம் தள்ளிவிடவேண்டு
[மென்பார்
ஆனகருமத்தை அனுசரித்தல் பிழை என்றும்
மானிடர்கள் பலர் மதிமயங்கிக் கூறுகின்றார்
நானிதை நிச்சயித்துக் கூறுவதுகேள் அர்ஜுனா

(ஸ்லோகம்) 5·

தவம்தானம் வேள்வி எல்லாம் தள்ளத் தகுந்ததல்ல
அவமாயங் கடப்பதற்கு அவை வழிகாட்டு வதாம்
மயக்கமின்றி இதன்பயனை விடுவதே தியாகமாம்
ஜயமுடன் புலனடக்கல் சன்யாச மென்றறிவாய்

(ஸ்லோகம்) 8.

துன்பமென்று கர்மத்தைத் துறப்பவன் துறவியல்ல
தன்பணி செய்து பலன் வேண்டாதவன் தியாகி
வன்பவம் கன்மத்தாலன்றி அழியாது
இன்பத்தை எதிர்பார்த்தோன் என்றும் அதை [யடையான்

(ஸ்லோகம்) 10.

சத்துவ குணத்தினுல் சந்தேகம் தெளிந்தவன்
உத்தம மானதென்று ஒன்றை விரும்பிடலும்
மத்தவை கர்மமென்றும் மனவெறுப் படைவதில்லை
சித்த சுத்திக்காகச் செய்கின்றார் சேவையெல்லாம்

(ஸ்லோகம்) 11, 12.

உடல் பற்றுடையவனுல் விட முடியாதவை கருமம்
விடல் கர்ம பற்றுதலே விவேகியின் செயலதுவே
இடர்செய்யும் இன்ப துன்பமாய் இரண்டும் கலந்தது [வாய்
தொடரும் கர்மபயன் மூவகையாகின்றது

(ஸ்லோகம்) 13, 14.

இருப்பிடமாம் உடலும் உள்ளியங்கிடும் ஜீவனும்
கருமம் ஞானமென்னும் இந்திரியங்கள் பத்தும்
தரும்பலச் செயல்களும் தானிவற்றில் சேராது
இருக்கும் சக்தி தெய்வமென்று இவ்வாறு உள்ளதனுல்

(ஸ்லோகம்) 16, 17.

பற்றில்லா ஆத்மாவோ ஜீவஸ்வ ரூபமோ
மற்றதில் கர்த்தாவாய்க் காண்போன் அறிவிலியாம்
சற்றும் தான் கர்த்தாவல்ல வென்றறிந்தவர்க்கு
குற்றமாம் கொலைதொழிலும் பற்றது காண்பார்த்தா

(ஸ்லோகம்) 18, 20.

அறிவும் அறியும் பொருளும் அறியப்படுவனும்
பிரிவில் மூன்றாகப் பேசப்படுகின்றார்
வேறுபாடில்லாது அனைத்தும் ஒன்றாய்க் காண்போன்
மாறுதலில்லாத அந்த ஞானம் சாத்விகமாம் பார்த்தா

(ஸ்லோகம்) 22.

ஏதோ ஓர்வடிவத்தில் காண்பதே தெய்வமென்று
வேதோக்தமாய் பூஜை செய்தாலும் பயனில்லை
ம்ாதோஷமாம் மனதின் மாயை விலக்கியவர்க்கு
ஈதோ நான்என்றவர்க்கு எங்கும்நான் தோன்றிடுவேன்

(ஸ்லோகம்) 23, 24.

பயனில் இச்சையின்றி செய்யும் பணியினால்
மயக்கிடும் பற்றறும் மனனும் சத்துவமாகும்
பயனில் இச்சையால் ப்ரயாசையுடன் செய்யும்
செயலெல்லாம் ராஜஸ குணத்தவர் செய்கையாம்

(ஸ்லோகம்) 25.

கஷ்டநஷ்டம் கருதாமல் பிறர் துன்பமறியாமல்
இஷ்டமாய் எவர்களும் ஏற்காத கருமங்கள்
நஷ்டமே பலன்தரும் மதிமயக்க முண்டாகும்
சிஷ்டா சாரமற்ற கர்மங்கள் தாமதமாம்

(ஸ்லோகம்) 26.

பற்றற்று நான் அற்று விடா முயற்சி ஊக்கமுடன்
வெற்றியிலும் தோல்வியிலும் கலங்காத சித்தமுடன்
மற்றவர் நன்மைக்காய் மனமுவந்து செய்பணிகள்
குற்ற மற்ற சாத்வீக கர்மமென்றுரைப்பார்கள்

(ஸ்லோகம்) 27, 28.

ஆசையின் தூண்டுதலால் பலனில் விருப்பமுடன்
மாசுடைய மனத்துடையோர் செய்கருமம் ராஜஸமாம்
நாசமிகும் தீச்செயலில் நாளும் உழல்பவர்கள்
ஈசன் என்னை இகழ்பவர்கள் செய்கருமம் தாமதமாம்

(ஸ்லோகம்) 30.

தக்கது தகாதது தான் அறிந்து செய் திரமும்
மிக்க பயம் பயமின்மை பந்த மோக்ஷங்களையும்
எக்கருத்து அறிந்து ஏற்றபடி செய்யுமாம்
அக்கருத்தே சாத்வீக பாவமென்றுரைப்பார்கள்

(ஸ்லோகம்) 31.

தர்மாதர்மம் விட தக்கவை தகாதவை என்ற
கர்மாவை ஒன்றுக்கொன்ருய்க் கருதி ஏற்கின்ற
துர்ப்புத்தி ராஜஸமாம் வர்மத்தினுல் எதையும்
கர்வித்து விபரீதமாய் எண்ணுவது தாமதாம்

(ஸ்லோகம்) 32, 34.

திடமுடன் ப்ராணன் இந்த்ரியங்கள் மனம்புத்தி
நாடமாட்டமெல்லாம் எங்கு யோகத்தால் அடங்குமோ
குடாகேசனே அது சாத்வீக சக்தியாம்
மடமையால் மூவாசை பற்றுதல் ராஜஸமாம்

(ஸ்லோகம்) **35, 36.**

தூக்கம் பயம் துக்கம் தொடரும் அஹங்காரம்
ஏக்கத்தையும் விடாதது தாமதகுணமாம்
தாக்கும் சுகமும் மூவகையாம் என்றுரைப்பார்
ஊக்கம் மிகுந்த உனக்குரைப்பேன் அதனைக்கேள்

(ஸ்லோகம்) **37, 38, 39,**

தொடங்குகையில் துன்பமாய் முடிவின்பம் தருவதாய்
திடமுடன் உள்ளத்தில் நிலைபெறும் சுகம் சத்வம்
இடர்செயும் ராஜஸம் முன் இன்பம் பின் துன்பம்
மடமையாம் மதிகெடுக்கும் சுகம் தாமதமென்பார்

(ஸ்லோகம்) **40, 41.**

முக்குணமில்லாத பொருள் மூவுலகிலும் இல்லை
சிக்கவைக்கும் தேவரையும் சித்தம் மூவகையாகி
தக்கபடி அவரவர் தன்மைக்கு ஏற்றபடி
முக்குணத்தால் கர்மங்கள் முற்றும் வகுத்துளது

(ஸ்லோகம்) **42.**

அகம்புறம் அடக்கம் பொறுமை நேர்மை சுத்தம்
மிக அனுபவஞானம் தவம்தானம்வேள்விசெயல்
ஜகவாழ்வின் பின்புமொரு வாழ்வுளதென்னும் உறுதி
தகவுடன் மறையோதல் அந்தணர் கருமமாம்

(ஸ்லோகம்) **43.**

சூரம்பொறுமை திறமை அடக்கியாளும் தன்மை
வீரமிகும் போர்திறம் புறங்காட்டாமைக் கொடை
தாரணியில் இவை எல்லாம் க்ஷத்ரியன் கடமை என்று
பாரதகுல மணியே பகர்ந்தார்கள் பெரியோர்கள்

(ஸ்லோகம்) 44.

பசுகாத்தல் பயிர்த்தொழில் பலபொருள்கள் வியாபாரம்
இசைய நடத்துதல் வைசியர் கருமமாம்
எசமானர் சேவையே சூத்திரர்கள் கருமமாய்
வசமாய் நால்வகைத் தருமம் வகுத்தது வேதமே

(ஸ்லோகம்) 45, 46.

அவனவன் கர்மத்தை அனுசரித்தவனவன்
தவமதே யாய்ஞான பரிபக்குவ மடைகின்றான்
எவனால் இவ்வுலகெல்லாம் வியாபித்து உள்ளதோ
அவனைத் தனக்குற்ற கர்மத்தால் அடைகின்றான்

(ஸ்லோகம்) 47.

மற்றவர் கருமத்தை காட்டிலும் தன் கருமம்
குற்றமா யிருந்திடினும் விட்டுவிடத் தக்கதல்ல
மற்றவர் கருமத்தைச் செய்தொருவன் மேன்மையுறான்
உற்றதன் கர்மத்தைச் செய்துய்ய வேண்டுமே

(ஸ்லோகம்) 48.

தொடங்கும் கர்மமெல்லாம் தோஷம் உடையதுதான்
விடக் கூடாதெவனும் குற்றமென்று தன் கருமம்
கொடுக்கும் புகையால் நெருப்பு சூழ்ந்திருத்தல்போல்
நடக்கும் கர்மமெல்லாம் முக்குணத்தின் சேர்க்கையாம்

(ஸ்லோகம்) 49.

எதிலும் பற்றில்லாது இந்திரிய மடக்கியவன்
சதிசெயும் ஆசையின் வேரை அறுத்தவன்
மதியினால் அனைத்தையும் துறந்தவன் எவனோ
யதியவன் சன்யாசி எனும் நிலையை அடைகின்றான்

(ஸ்லோகம்) 50.

சித்தியடைந்தவன் ஞானத்தின் எல்லையாம்
முக்தியை எவ்வாறு எய்துகிறான் என்பதனை
புத்தியிற் சிறந்த குந்தியின் மைந்தனே
அத்தனை அடையும் வகை அறிவிப்பேன் உந்தனுக்கு

(ஸ்லோகம்) 51.

நிர்மலமனத்துடன் நிலைதளரா உறுதியுடன்
கர்மத்தில் தள்ளும் விருப்பு வெறுப்பற்றவனாய்
தர்மத்துக் கன்னியமாம் புலன்போவதை அடக்கி
துர்மனமும் உடலும் துடிப்பில்லாது அடக்கி

(ஸ்லோகம்) 52.

தனிமையை நாடி தன் ஆகாரம் சுருக்கி
நினைவினில் எப்போதும் தியான பரனாய் இருந்து
மனம் வாக்குக் காயத்தை வைராக்யத்தாலடக்கி
அனித்திய வாழ்க்கையில் ஆசை வைக்காதவனாய்

(ஸ்லோகம்) 53.

நான் தபசியோகி ஞானிஎன்று கர்வித்து
ஆன்மபலத்தினை அஹங்கரித்தழிக்காமல்
தான் மேலெழுந்துவரும் தாபமெல்லாம் அடக்கி
மோனத்தில் இருப்பவன் முக்தனாய் ஆகின்றான்

(ஸ்லோகம்) 54.

பரமனை அறிந்த ப்ரம்மநிஷ்டன் மனம்
வருத்தப்படுவதில்லை ஆசைப் படுவதில்லை
கருணையால் உயிரெல்லாம் சமமாம்க் கருதியவன்
சரணடைந் தென்னையே அடைகின்றான் பக்தியால்

(ஸ்லோகம்) 56.

பாரில் பற்றுள்ளவன்போல் பணிசெய்தி ருந்தாலும்
மாறில்லா பக்தியுடன் மனதில் என்னை தியானிப்போன்
நீரில் குமிழியென இவ்வாழ்வை நிச்சயித்து
ஈறில்லா என்பதவி எய்துகின்றான் என்னருளால்

(ஸ்லோகம்) 57, 58.

எல்லாப் பணிகளையும் என்னிடத்தில் அர்ப்பித்து
நில்லா மனதை நிறுத்திவைத் தென்னிடத்தில்
எல்லாத் தடைகளையும் தாண்டிச் செல்வாய்
[என்னருளால்
பொல்லா ஆணவத்தால்புறக்கணித்தால் அழிந்திடுவாய்

(ஸ்லோகம்) 59, 60.

ஆணவத்தால் போர்புரியமாட்டேன் என்ற
[ஹங்கரித்தால்
வீணில் அது பொய்யாகும் விடாதுனைக்கருமம்
கோணமதியால் நீ குறித்தபடி செய்கிலையேல்
நாண மற்றஉன் வினையே நாட்டுமுன்னை அப்பணியில்

(ஸ்லோகம்) 61, 62.

யந்திரத்தால் இயங்கும் பாவைகள்போல் ஜீவ
[னெல்லாம்
தந்திரமாய் மாயையிடம் தாம் சிக்கி ஆடுகின்றார்
எந்திரத்தால் நானவர்கள் இதயத்துள் நிற்கின்றேன்
உந்திரத்தால் அடைந்தென்னை உத்தம நிலையடைவாய்

(ஸ்லோகம்) 63, 64.

ரகசியத்தில் சிறந்த ரகசியமாய் ஞானத்தை
உகந்துநான் உனக் குரைத்தேன் உத்தமபக்தனென்று
தகவுடன் ஆராய்ந்து தக்கபடி நீ நடப்பாய்
மிக உயர்ந்த தத்துவத்தைக் கூறினேன் நண்பனே

(ஸ்லோகம்) 65.

என்னிடம் மனம் வைத்து அன்பு செய்பவனுய்
என்னை பூசித்து என்னையே வணங்குவாய்
எனக்குநீ நேயனென்று உனக்கு உண்மை உரைத்தேன்
என்பணி எல்லாம் செய்து என்னையே அடைவாய்

(ஸ்லோகம்) 6, 6.

எல்லா தருமங்களையும் அறவே விட்டொழித்து
வில்லாளியே என்னை விரும்பிச் சரணடைவாய்
பொல்லாவினை தவிர்த்து உன்னை நான் காத்திடுவேன்
நில்லாதுன் துன்பத்தை நீக்குவேன் வருந்தாதே

(ஸ்லோகம்) 67.

என்னுல் உனக்கு எடுத்துரைக்கப்பட்ட இந்த
பொன்னுன வாக்கியத்தை போதிக்கத் தகாதவர்க்கு
சொன்னுல் சுகிருதம் இல்லை சொல்லாதே இகழ்வார்க்கு
முன்னுல் தவம்செய்யாமூடர்கள் அறியாரிதனை

(ஸ்லோகப்) 68.

இச்சிறந்த ரகசியத்தை மெச்சும் என்பக்தருக்கு
உச்சிதமாய் உரைக்கும் உத்தமன் என்பக்தன்
சச்சிதானந்த பரமாம் என் பதவியை
நிச்சயமாய் வந்தடைவார் அச்சமில்லைஅன்னவர்க்கே

(ஸ்லோகம்) 70.

நம்மிருவர் சம்வாதமாம் இந்த கீதையை
தம்மனதில் பக்தியுடன் தரணியில் கேட்பவர்கள்
எம்மரும் பதவியை எய்திடுவார் இறுதியினில்
அம்மனிதர் புண்ணியம் அளவிடற் கரியதாம்

(ஸ்லோகம்) 71, 72.

கருத்துடன் கீதையைக் கேட்டவன் கதிபெறுவான்
அருச்சிக்கும் அன்பனவன் அடைவான் பரமபதம்
ஒருசிறிது அறிந்தாலும் உயர்ந்த பயனடைவார்
அர்ஜுனா அஜ்ஞானம் அழிந்து அறிவு தெளிந்ததா

அர்ஜுனன் கூறுவது

(ஸ்லோகம்) 73.

அச்சுதா உன்னருளால் அஜ்ஞானம் நீங்கிற்று
நிச்சயமாம் நெஞ்சம் நிலைபெற்று நின்றது
இச்சிறியன் பிழைபொறுத்து நிச்சயப் பொருளுரைத்
[தாய்
அச்சமின்றி போர்புரிந்துன் ஆக்கினைக்கடங்குவேன்

மாயையால் மதிமயங்கிக் கலங்கினேன் கண்ணநான்
தாயையொத்தன்புடன் தண்ணருள்காட்டினய்
தீயையொத் திடுமிந்த திருதராஷ்ட்ர பூண்டெல்லாம்
பேயைப்போல் அழித்திடுவேன் பெருமான் உன்
[கருணையால்

ஸஞ்சயர் கூறுவது

(ஸ்லோகம்) 74, 75.

பகவான் ஸ்ரீ க்ருஷ்ணருக்கும் பக்தனும் அர்ஜுனர்க்கும்
நிகழ்ந்த அதிஅற்புதமாம் சம்பாஷணையைக் கேட்டு
மிகவும் ஆனந்தத்துடன் ரோமமெல்லாம் சிலிர்க்க
அகமகிழ்ந்தறிந்தேன் நான் அகக் கண்களாற் கண்டு

மஹாத்மா வியாஸரின் மாப்பெருங் கருணையால்
மஹாபாரதப் போரை மனக்கண்களாற் கண்டு
மஹாபுருஷராம் வாஸுதேவரின் அருள்மொழியை
மஹான் அர்ஜுனன்போல் மனதாரக் கேட்டேன்நான்

(ஸ்லோகம்) 76.

தேஜோமயமான திவ்ய ரூபத்தைக்கண்டு
ராஜனே எண்ணி இன்பம் அடைகின்றேன்
மாஜெயம் பாண்டவற்கே மற்றிதற்கய்யமில்லை
பூஜைக் குரியவனும் கண்ணன் துணை அவர்க்கே

(ஸ்லோகம்) 77.

ஹரியுடைய அற்புதமாம் விச்வரூபத்தைக் கண்டு
பெரிதும் அதிசயத்தால் ப்ரமிக்கின்றது உள்ளம்
விரியும் கதிர்போல் விளங்கும் ஸ்ரீக்ருஷ்ணனை
பிரியாதிருக்கும் பார்த்தன் பெரும்புண்யம் செய்தவனும்

(ஸ்லோகம்) 78.

யோகீஸ்வரனும் க்ருஷ்ணன் எங்கிருக்கின்ருனே
மாகாண்டீபன் பார்த்தன் எங்கிருக்கின்ருனே
ஸ்ரீ காத்திருக்குமங்கே நீதியும் நிச்சயமாம்
ஏகாண்டமாய்ப் புகழும் வெற்றியும் உண்டாகும்

பாண்டவர் சகாயனுய் பார்த்தனுக்கு சாரதியாய்
ஆண்டவன் ஸ்ரீ க்ருஷ்ணன் அருகில் நின்று காத்தால்
ஈண்டவரை ஜெயிப்பவர்யார் ஈரேழுலகினிலும்
மாண்டது திவினைஎல்லாம் மறைஎல்லாம் செழித்
[ததுவே

கீதா மஹாத்மியம்

கோரஸம்சாரத்தை தாண்டுவதற்கு ஹரி
நாராயணர் தந்த கீதை நல் ஓடமாம்
யாராயினும் கீதை ஆராய்ந்து அறிவாரேல்
சீராயெல்லாக் கருமம் செய்த பலன் அடைவார்

கீதை என்னும் புத்தகம் எவ்விடமிருக்குமோ
பூதலத்தின் புண்ய தீர்த்தங்களும் அங்கிருக்கும்
கீதை எவன் ஓதுவனே அவன் உடல் உயிரினில்
மாதேவர் ரிஷிகளெல்லாம் மறைந்து ரக்ஷிக்கின்றார்

ஸர்வ சாஸ்த்ரங்களும் கீதையில் உள்ளது
ஸர்வ தேவர்களும் ஹரியினுள் இருக்கின்றார்
ஸர்வ புனித நாமம் கீதை கங்கை காயத்ரி
ஸர்வேச்வரனும் ஸ்ரீ கோவிந்தன் நாமமே

ஒன்றே சாஸ்த்ரம் அது உரைத்தவன் ஸ்ரீ க்ருஷ்ணன்
ஒன்றே தெய்வமவன் தேவகியின் திருமைந்தன்
ஒன்றே மந்திரம் ஓம் ஹரிநாரயண
ஒன்றே திருப்பணி ஸ்ரீஹரிபாத சேவையே

ஸ்ரீ பகவான் அருள்வாக்கு

கீதைஎன் ஹ்ருதயம் பார்த்தா கீதையே ஞானசாரம்
கீதைஎன் அறிவின் ஒளியாம் கீதைஎன் அழியாஞானம்
கீதையில் உறைகின்றேன் நான் கீதை என் உயர்ந்த
[பதமாம்
கீதையின் ஞானத்தால் நான் காக்கின்றேன்
[மூவுலகையும்

அர்ஜுனன் ப்ரார்த்தனை

தாயும் நீ தந்தையும் நீ சுற்றமும் நீ செல்வமும் நீ
நேயனும் கல்வியும் நீ அனைத்து நீ எனக்கு கிருஷ்ண

மோக்ஷசன்யாச யோகம் முடிவடைந்தது.

ஸ்ரீமத் பகவத்கீதா போதம் முற்றியது.

(ஹரி : ஓம் தத்ஸத் ப்ரம்மார்ப்பண மஸ்து)

தமிழில்

சுந்தரகாண்டம் மூலமும் கருத்துரையும்	6—00
சுந்தரகாண்டம் மூலம் பாராயணத்திற்குறியது	2—25
பகவத்கீதை மூலமும் அத்யாய கருத்துரையும்	1—25
கந்தரனுபூதி-திருப்புகழ் மணி அவர்கள் உரையுடன்	1—50
கிருஷ்ணலீலா தரங்கிணி	1—50
தேவி மகாத்மியம்	1—50
பஜனோத்ஸவ பத்ததி	0—75
புகழ்மணி வாசகம்	0—75
ஆறுபடைவீட்டு திருப்புகழ் பதிகங்கள் கீர்த்தனங்கள்	0—50
தேவி நித்யபாராயணம்	0—62
லலிதா ஸகஸ்ரம்	0—50
சுப்ரமண்ய ஸகஸ்ரம்	0—50
வெங்டேச ,,	0—50
ஹனுமத் ,,	0—50
துர்க்கா ,,	0—50
சனி ஸகஸ்ரம்	0—50
நித்தியான்னிகம்	0—50
கணபதி ஸகஸ்ரம்	0—44
சிவ ,,	0—44
விஷ்ணு ,,	0—44
லக்ஷிமி ,,	0—44
ராமர் ,,	0—44
நீதி சாஸ்திரம் உரையுடன்	0—50
அஷ்டோத்ர கதம்பம்	0—56
சுப்ரமண்ய பூஜாவிதி	0—25
ருத்ரம் சமகம்	0—25
கல்பத்ரயம்	0—31

பி. டி. பாணி கம்பெனி

மதராஸ்—5.

திருப்புகழ் மணி அவர்களால் தொகுக்கப்பட்ட

			ரூ.	ந.பை.
திருப்புகழ் பஜனை	—	—	1	00
கந்தரனுபூதி உரையுடன்	—	—	1	50
புகழ்மணி வாசகம்	—	—	0	75